Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-24 07-06-2005 செவ்வாய்க்கிழமை ஓசை 109



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12121)

# கிழக்கில் புலிகளின் செயற்பாட்டை முடக்க

# சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு முயற்சி!

## புலிகளின் அரசியல்துறைச் செயலகங்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்

(கொழும்பு)

**இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாட்டை முடக்குவதற்குச் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு முனைப்புடன் செயற்பட்டு வருவதாகவும் இதன் ஒரு கட்டமாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைச் செயலகங்கள்மீது தேடுதல் என்ற ரீதியில் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பினர் தாக்குதல்களை நடத்திவருவதாகவும் தெரியவருகின்றது.**

இந்த வகையில் இம்மாதம் முதலாம் திகதி அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று விடுதலைப்புலிகளின் மாவட்ட நிர்வாகத்துறை அலுவலகம் மீதும், மூன்றாம்திகதி அம்பாறை-தம்பிலுவில் அரசியல்துறைச் செயலகம்மீதும், நான்காம் திகதி மட்டக்களப்பு நகர பிரதேச அரசியல்துறை அலுவலகங்கள் மீதும்,தேடுதல் என்ற ரீதியிலும், அராஜகமும் அத்துமீறலும் இடம்பெற்றுள்ளது. போராளிகளும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

இந்தவகையில் நேற்று விடுதலைப்புலிகளின் அம்பாறை, நாவிதன்வெளி அரசியல்துறை காரியாலயம் மீது விசேட அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்தியதுடன், நாவிதன்வெளி அரசியல்துறை பொறுப்பாளரையும் தாக்கியுள்ளன. நேற்றுக் காலை 9.45மணிக்கு இந்தச் சம்பவம் இடம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத்தூதுவர்-சு.ப.தமிழ்ச்செல்வன்; கிளிநொச்சியில் இன்று சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் இன்று அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

காலை 10.00 மணியளவில் இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் கான்பிரஸ்கர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப்பிரதிநிதி ஆகியோர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெதுப்பியின் விற்பனை விலை 15 ரூபாவாக நிர்ணயம்

(நமது நிருபர்)

உலரெடை 350 கிராம் ஆகவுள்ள வெதுப்பி ஒன்றின் விற்பனை விலை 15 ரூபாவாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளதென நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர்அறிவித்துள்ளனர். இவ் விலைக்கு இணங்க நாளை முதல் வெதுப்பியினை விற்பனை செய்யும்படி வெதுப்பக உரிமையாளர்கள் வேண்டப்பட்டுள்ளனர்.வெதுப்பியின் நிறையும், தரமும் பேணப்பட வேண்டுமெனவும் விலைக்கட்டுப்பாட்டுப்பகுதியினர் மேலும் அறிவித்துள்ளனர்.

## கருணா குழுவைச் சேர்ந்தவர் வாழைச்சேனையில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் நேற்று முன்தினமிரவு சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். ஆலங்குளத்தைச்சேர்ந்த கறுவல்தம்பி பாக்கியராசா (வயது 44) என்பரே சுட்டுக்கொல்லப்பட்டுளளார்.

ஆலங்குளத்தைச் சொந்த இடமாகக்கொண்ட இவர் கடந்த ஒருவருடமாக வெலிக்கந்தை தீவுச்சேனையில் வசித்து வந்தார். மீண்டும் தனது இருப்பிடத்தை மாற்றி ஆலங்குளத்தில் தங்கியிருந்தார். நேற்று முன்தினமிரவு சுட்டுக்கொல்லப்பட்ட இவரது சடலம் நேற்றுக்காலை பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து மட்டக்களப்பு பொலன்நறுவை வீதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

இவரது மரணம் குறித்து சிறிலங்கா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான போராட்டம் ஜாதிகஹெல உறுமயவினர் நேற்று ஆரம்பிப்பு!

### விவகாரத்தை சனாதிபதி கை விடும்வரையில் தொடருமாம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாதிக ஹெலஉறுமய வின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித்த தேரர் கண்டி தலதா மாளிகையின் முன்னால் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார். பொதுக் கட்டமைப்பு தொடர்பான தமது நடவடிக்கைகளை சனாதிபதி நிறுத்தும் வரை தாம் இந்தப் போராட்டத்தை நடத்தப் போவதாக ஜாதிக ஹெலஉறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தனதேரர் தெரிவித்துள்ளார். இதேவேளை விடுதலைப் புலிகள் கோரும் பொதுக் கட்டமைப்பிற்கு ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்கும் அனைவரும் தேசத்துரோகிகள் பட்டியலில் உள்ளடக் கப்படுவார்கள் என சிங்கள பௌத்த அமைப்பான தேசிய பிக்குகள் முன்னணி பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பூரில் புலிகளின் விமான தளம்; குற்றச்சாட்டுக்கு எழிலன் மறுப்பு

(திருகோணமலை)

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பினர் சம்பூர் பகுதியில் விமான ஓடுதளம் ஒன்றினை அமைத்துவருவதாக தெரிவிக்கப்படும் குற்றச் சாட்டினை தமிழீழவிடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் மறுத்துள்ளார். புலிகளின் கட்டுப்பாட்டுப பிரதேசத்துக்கு அத்தியாவசிய பண்டங்கள் எடுத்துச் செல்வதைத் தடை செய்யும் இராணுவத்தினர் அது தொடர்பில் சர்வதேச ரீதியாக ஏற்பட்டுவரும் எதிர்ப்பை திசை திருப்புவதற்கே இவ்வாறான குற்றசாட்டுகளைச் செய்வதாகத் தெரிவித்துள்ளார். (32)

## வெள்ளவத்தையில் துப்பாக்கிச் சூடு; தமிழ் இளைஞர் பலியானார்

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தையில் நேற்றுக் காலை இடம் பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுளளார். வெள்ளவத்தை நெல்சன் வீதியில் அதிகாலை 2-50 இற்கு இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல் லப்பட்டவர் திருகோணமலை பூநகரியைச் சேர்ந்த வீரபாகு இந்திரகுமார் (வயது-27) எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் இவர் அங்கிருந்து கொழும்புக்கு செல்வதற்காகப் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரம் அவர் சட்டைப்பையில் இருந்தாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

## கடற்கரை காணி சுவீகரிப்பிற்கு எதிர்ப்பு; பொத்துவிலில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் பொத்துவில் உல்ல என்ற இடத்தில் நேற்று பொதுமக்கள் ஆர்ப் பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட உல்ல என்ற இடம் முதல் பாணம என்ற இடத்திற்குமான 17 கிலோமீற்றர் தூர கடற்கரையில் இருந்து 200 மீற்றர் பகுதியை உல்லாசப் பிரயாண சபை சுவீகரிப்பதற்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் ஒன்றியத்தினால் கதவடைப்புடன் கூடிய ஆர்ப்பாட்டமே நேற்று நடத்தப்பட்டது. ஆழிப்பேரலையின் பின்னர் நாட்டின் ஏனைய பகுதிகளில் கடற்கரையில் இருந்து 100 மீற்றருக்கு அப்பாலே கட்டடங்கள் அமைக்கப்படவேண்டுமென அரசாங்கம் தெரிவித்து வருகிறது எனினும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டாஞ்சேனை படுகொலை; இரு பெண்களிடம் விசாரணை

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் இரு இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இரண்டு பெண்கள் பொலிசாரினால் விசாரணைக்காக அழைத்துச் செல் லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்ட இளைஞர்களிடமிருந்து நான்கு அடையாள அட்டைகள் 5,000 ரூபா பணம், உடுப்புப்பொதிகள்

(12 ஆம் பக்கம் பார்க்ச

## வரிவிளம்பரம்

### வீடு விற்பனைக்கு

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு முன்ஒழுங்கையில் உள்ள 2ஏக்கர் காணியுடன் பெரிய கல்வீடு, கிணறு, மலசல கூட வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- திருமதி:பூமணி-தர்மலிங்கம், 3 ஆம் வட்டாரம், முள்ளியவளை. (6166)

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி உதயநகர் மேற்கு, இலக்கம் 200 இல் 1/4 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- தங்கமதி நகைமாடம் திருநகர் வீதி, கிளிநொச்சி.. (சி.12036)

# வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவனம் மன்னார்-கருங்கண்டலில் திறப்பு

(மன்னார்)

மன்னார் கருங்கண்டல் பகுதியில் வன்னி வேளாண்தொழில் நுட்ப நிறுவனம் ஒன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட விதை நெல் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் பூராசா தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை மன்னார் மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுநிறுவனப் பொறுப்பாளர் செழியன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து வன்னிவேளாண் தொழிலகத்தை மன்னார் நகர புதிய பிரதேச செயலாளரும், முன்னாள் கமநல சேவை உதவிப் பணிப்பாளருமான திருமதி. ஸ்ரானி டீமெல் திறந்து வைத்தார். தொடர்ந்து அவர் சிறப்புரையாற்று கையில்; வன்னி வாழ்விவசாயிகளின் நலன் கருதியே இந்நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ள தென்றும் தெரிவித்தார். இதன் போது முதல் விற்பனையாக விவசாயி ஒருவர் இருசக்கர உழவு இயந்திரம் ஒன்றை வாங்கி விற் பனையையும் ஆரம்பித்து வைத்தார். (18)

# மன்னாரில் புத்தர்சிலை அமைத்திருந்த காணி இராணுவத்தினரால் வேலி அமைத்துவிஸ்தரிப்பு

## -மன்னார் மக்கள் எதிர்ப்பு

(மன்னார்)

மன்னார் சாந்திபுரத்தில் சங்கராம போதி விகாரை அமைந்துள்ள காணி கால் ஏக்கரிலிருந்து 16 ஏக்கராக இராணுவத்தினரால் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இந்த 16 ஏக்கர் காணியையும் இராணுவத்தினர் முட்கம்பிவேலி அடைத்து தம்வசப்படுத்தியுள்ளனர்.

மேற்படி சம்பவத்தினை மன்னார் பிரதேச மக்கள் அண்மையில் எதிர்ப்புத் தெரிவித்து கம்பிகளை அகற்றி இதனைத் தடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டனர்.

தாயகத்திலிருந்து அகதிகளாக இந்தியா சென்று மீண்டும் தாயகம் திரும்பிய எங்களுக்கு குடியிருக்க நிலம் இல்லாத நிலையில் புத்தர் சிலைகளைவைப்பதா எனக் கோசம் எழுப்பி காணிகளைத் தமக்குத் தருமாறு கோரி மக்கள் அண்மையில் ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர். (18).

# சுனாமி வேலைத்திட்டத்திற்கான ஆள்சேர்ப்பு

**சுனாமி வேலைத்திட்டத்தினை மேற்கொள்வதற்கு கரைதுறைப்பற்று உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் நிரந்தரமாக வசித்துவரும் க.பொ.த உயர்தரத்தில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்த 21 வயதிற்கும், 45 வயதிற்கும் இடைப்பட்டோரை தேர்வு செய்யப்படவுள்ளதால்.**

* **கல்வித்தகைமைச் சான்றிதழ்**
* **பிறப்புச் சான்றிதழ்**

**என்பவற்றின் பிரதிகளுடன் எதிர்வரும் 08.06.2005 அன்று பிற்பகல் 1.30மணியளவில் வித்தியாபுரம் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள முல்லை மாவட்ட சிக்கன கடனுதவிக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் நடைபெறும் நேர்காணலுக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.**

குறிப்பு:-

* சேவை ஒப்பந்தஅடிப்படையில் அமைந்ததாகும்.
* சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

ஸ்ராலின்,
மாவட்ட செயலாளர்,
சி.க.கூ.சங்க.சமாசம்,
முல்லைத்தீவு.

*(சி.12040)*

# பதவி வெற்றிடம்

வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் குறிப்பிடும் பதவி வெற்றிடம் நிரப்பப்படவுள்ளது. விண்ணப்பிக்க விரும்பும் தகைமையுள்ள ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் தலைவர், வவுனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி என்னும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அன்றேல் நேரடியாகவோ 20.6.2005ஆம் திகதிக்கு முன கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.விண்ணப்பங்கள் சகல விபரங்களும் தெளிவாக உள்ளடக்கப்பட்டதாக சுயமாகத் தயாரித்து அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கிளை முகாமையாளா: 208/13

சம்பளம் :31/99இன் படி 5250.00-75x 10-80 x 10 6800.00
63000.00-900.00 x 10-960.00 x 10-81600 இத்துடன்
அதிகரிக்கப்பட்டசம்பளம் ரூ.2500/உம் சேர்த்து வழங்கப்படும்.

கல்வித்தகைமை : 01: க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் பாசை, கணிதம் 1/ கணிதம் 2/ வர்த்தக எண்கணிதம் / எண் கணிதம் ஆகிய இரு பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச்சித்திஉட்பட மூன்று பாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

02. தமிழ்/கணிதம் / வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த.உயர் தரத்தில் சித்தி பெற்றிருப்பின் க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ்,கணிதம்1/ கணிதம2/ வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக்கப்படும்.

**தலைவர்**
**வ.வ.ப.நோ.கூ.சங்கம்,**
நெடுங்கேணி,
02.06.2005.

(சி-12037)

# மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ.து) கிளைப்பொதுச்சபைக் கூட்டம். 2005.06.21

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் கீழ்வரும் 09 கிளைகளுக்குமான கிளைக்குழு, மகளிர்குழு, பொதுச்சபை பேராளர் தெரிவுசெய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 2005.06.21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் விபரப்படி நடைபெறும். இவ் அறிவித்தலை ஒவ்வொரு வாக்களிக்க தகமையுடைய உறுப்பினரும் தமக்கான சொந்த அறிவித்தலாகக் கருதி தவறாது சமுகம் கொடுத்து கிளைக்குழு உறுப்பினர்களையும், பொதுச்சபை பேராளர்களையும் தெரிவுசெய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

| கிளை இல | கிளையின்பெயர் | தலைமைதாங்கும் உத்தியோகத்தர் | கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம். |
|---|---|---|---|
| 01 | புதுக்குடியிருப்பு மேற்கு | க. சதீஸ்வரன் | புது.ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம். |
| 02 | புதுக்குடியிருப்பு கிழக்கு | சி.சிவகரன் | புது.ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம். |
| 03 | புனித சூசையப்பர் | சி.குலேந்திரன் | புது.றோ.க. வித்தியாலயம். |
| 04 | ஆனந்தபுரம் | கு.உதயகுமார் | ஆனந்தபுரம்அ.த.க பாடசாலை |
| 05. | இரணைப்பாலை | சி.வசீகரன் | இரணைப்பாலை மகாவித்தியாலயம் |
| 06. | தேவிபுரம் | வ.நிருபாகரன் | தேவிபுரம் அ.த.கபாடசாலை |
| 07 | உடையார்கட்டு | ச.சசீந்திரன் | உடையார்கட்டு -மகாவித்தியாலயம் |
| 08. | சுதந்திரபுரம் | சு.ரஜீந்திரன் | சுதந்திரபுரம் அ.த.கபாடசாலை. |
| 09 | வள்ளிபுனம் | ச.பாலகிருஸ்ணன் | வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம். |

*திரு. த. பத்மானந்தன்,*
*தேர்தல் உத்தியோகத்தர்.மு/புதுக்குடியிருப்பு.*
*ப.நோ.கூ. சங்கம்.*

(சி.12039)

***POST VACANCY OF REGIONAL MINE ACTION INFORMATION SUPERVISOR***

***Duty Station: Kilinochchi Mine Action Office***

***Duties and Responsibilities***

*Supervise data entry and troubleshooting
*Run the IT and database department
*Supervice smooth running of the Information System for Mine Action(IMSMA)
*Make sure that the data input to be on time to avoid unnecessary delays
*Production of data requests within the scope of the decentralized Information Management System for Mine Action (IMSMA)
*Analysis of incoming survey and casuality information
*Maintenance of a filing system for IMSMA and Task Dessier related documentation and ensuring all files are copied for delivery to central IMSMA system.
*Importing /exporting data for synchronization with central IMSMA system according to the schedule worked out by the IMSMA officer
* Entering all minefield related information into IMSMA
* Prepare and forward data requests to Colombo, on behalf of requesting agencies, for produts not within the scope of the decentralized IMSMA sytstem.
* Distribution of Mine Action office (MAO) information to requesting agencies
* Coordination and production of scaled mapping products
* Security and maintenance of MAO issued equipment.

***Educational Background:***

*Graduate or under Graduate of an Institute or University in an IT or GIS related subject

***Languages:***

*Fluent in both written and spoken English and Tamil
*Working knowledge of written and spoken Sinhala is an advantage.

***others:***

*Flexible and adaptable to any situation
*Abilty to work independently, under pressure and long hours;
*Excellent computer skills in the Windows IP professional and NT 4 Microsoft Access 2000
*Knowledge of ESRI Arc view 3.2 or other GIS sofrware is an advantage
*Very good knowledge in topograpihical mapping reading
*Possess good work habits with a willingness to work in multicultural envuironment.
*Willing to travel for training if required

Appilcations to be forwarded to Post of Regional Information Superviser ;Adminination ,District Mine Action office Jaffna .Qualified candidates are invited to send an updated CV containing details of edudncational and professional qualificatin and work experience with the names of two non-related referees and a contact telephone umber within 07 days of this advertisementent. Interviews will be held in the Jaffna District Mine Action Office.

*(சி.12189)*

# இந்திய-பாக். அமைதி நடவடிக்கை நியாயமான வேகத்தில் செல்கிறது



பாக்தாத்தில் அபுகிராய்ப் சிறைச்சாலைக்கருகில் குண்டுத்தாக்குதலை நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம்ஹுசேனின் ஆதரவாளர் காலித் அல் அல்வானியை கைது செய்துள்ள ஈராக்கிய படையினர்.

(சிங்கப்பூர்)

**இந்தியா- பாக். அமைதி நடவடிக்கைகள் நியாயமான வேகத்தில் சென்றுகொண்டிருக்கிறது என்று பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் திருப்தி தெரிவித்துள்ளார்.**



முஷாரப்

முன் எப்போதும் இல்லாத வகையில் இந்தியா- பாகிஸ்தான் இடையே சாதகமான நல்லெண்ணச் சூழ்நிலை உருவாகியுள்ளது. அமைதிப் பேச்சை தொடங்கியதும் கூட்டறிக்கை வெளியிட்டோம். இதற்கு முன் இதுபோல் நடந்ததில்லை. அமைதி நடவடிக்கைகள் சரியான திசையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. அமைதி நடவடிக்கை நியாயமான வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது.

இந்தியா- பாகிஸ்தான் இடையே மூன்றுமுறை போர் நடந்திருக்கிறது. பலமுறை சிறு சண்டைகள் நடந்துள்ளன. 50 ஆண்டு வெறுப்புணர்ச்சியை நீக்க நீண்ட நாட்களாகும் சியாச்சின் ஜம்மு காஷ்மீரில் கட்டப்படும் கிஷனகங்கா நீர்மின் திட்டம் ஆகிய பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்படும் என்று நம்புகிறேன். பாகிஸ்தானுக்கு வளமான எதிர்காலம் இருக்கிறது. சீனாவும் நிலத்தால் சூழப்பெற்ற தெற்காசிய நாடுகளும் உலகச் சந்தைக்கு செல்ல பாகிஸ்தானிலுள்ள குவாதர் துறைமுகம் தான் ஒரே வழி. அதேபோல் இந்தியச் சந்தைகளுக்கும் பாகிஸ்தான் வழியாகத்தான் செல்ல முடியும் வேறு வழி எதுவும் கிடையாது. ஈரான் கட்டார் எரிவாயுகுழாய் திட்டத்தை பாகிஸ்தான் வழியாக செல்லாமல் நிறைவேற்ற முடியாது ஈரான்- இந்தியா எரிவாயு குழாய் திட்டத்தை பாகிஸ்தான் வழியாக பாதுகாப்பாக எடுத்துச் செல்வதற்கு சர்வதேச உத்தரவாதம் தர தயாராக இருக்கிறோம் இவ்வாறு முஷாரப் கூறினார்.

## இரண்டு தலிபான் தளபதிகள் கைது

(காபூல்)


ஆப்கானிஸ்தானில் தலிபான் இயக்கத் தளபதிகள் இரண்டு பேரை ஆப்கான் இராணுவம் கைது செய்துள்ளது. பாரா மாநிலத்தின் டிவிஷன் கொமாண்டர் ஹாஜி சுல்தான், முல்லா முகமது ரஹீம் ஆகிய இரண்டு பேருமே கைதானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க இராணுவத்தால் ஹாஜி சுல்தான் தேடப்பட்டு வந்ததால் அவர் அமெரிக்க இராணுவத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

## சதாம் ஹுசேன் மீது 500 குற்றச்சாட்டு 12 குற்றச்சாட்டுக்கள் மீதே விசாரணை

(பாக்தாத்)

'ஈராக் முன்னாள் சர்வாதிகாரி சதாம் ஹுசேன் மீது 500 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படும். ஆனால் 12 குற்றச்சாட்டுகளின் கீழ் மட்டும் வழக்கு விசாரணை நடத்தப்படும்' என்று ஈராக் அரசு அறிவித்துள்ளது.



சதாம் ஹுசேன்

சதாம் மீது 500 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படவுள்ளன ஆனால் போதுமான ஆவணங்கள் சாட்சியங்கள் உள்ள 12 குற்றச்சாட்டுகளின் கீழ் மட்டுமே வழக்கு விசாரணை நடத்தப்படும் என்று ஈராக் பிரதமரின் செய்தித் தொடர்பாளர் லைத் குபா கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

சதாம் மீதுள்ள 500 குற்றச்சாட்டுகளையும் விசாரிப்பது நேரத்தை வீணடிப்பது ஆகும். 12 வழக்குகளிலேயே அவருக்குத் தகுந்த தண்டனை கொடுக்கப்பட முடியும் என்று விசாரணை நீதிபதிகள் நம்புகிறார்கள்.

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் சதாம் ஹுசேன் மீது விசாரணை நடத்தப்படும்.

குர்திஷ் இன மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட சித்திரவதைகள், குவைத் மீது ஆக்கிரமிப்பு செய்தது, ஷியா முஸ்லிம்களை ஒடுக்கியது, 30 ஆண்டுகளில் அரசியல் எதிரிகளை கொன்று குவித்தது ஆகிய குற்றச்சாட்டுகள் அவர் மீது பதிவு செய்யப்படவுள்ளன.



நேற்று முன்தினம் லெபனானில் நடைபெற்ற பாராளுமன்றத தேர்தலின் போது லெபனானிய ஹிஸ்புல்லா கட்சி ஆதரவாளர்கள் ஆட்லறி செலுத்திக்கு மேலிருந்து தமது கொடியையும், லெபானிய கொடியையும் அசைத்துக்காட்டுவதையும் படத்தில் காணலாம்.

## சீனாவைத் தாக்கவல்ல ஏவுகணை தாய்வான் வெற்றிகர சோதனை

சீனாவை இலக்காக வைத்து தாய்வான் நடத்திய எவுகணைச் சோதனை வெற்றிகரமாக முடிந்ததாக சீனநாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது. 1000 கிலோ மீற்றர் செல்லக்கூடிய இந்த ஏவுகணையை தாய்வான் இராணுவத்தின் சங்ஷான் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிலையம் உருவாக்கியுள்ளது.தென்கிழக்கு சீனாவிலுள்ள இராணுவ முகாம்களைத் தாக்கவல்ல திறனை இந்த ஏவுகணை பெற்றுள்ளதாக 'சைனா டைம்ஸ்'நாளிதழ் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளது. இச் சோதனை எப்பொழுது நடத்தப்பட்டது என்ற விவரத்தை அது தெரிவிக்கவில்லை.

## இந்திய-அமெரிக்க இராணுவ உறவு எதிர்காலத்தில் வலுவடையும் நம்பிக்கை

ஆசியக் கண்டத்தில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் ஒன்றான இந்தியாவுடன் இராணுவ உறவுகள் எதிர்காலத்தில் மேலும் வலுவடையும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் கூறியதாவது;

இந்தியா எந்த இலக்கை நோக்கி முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறது என்பது தெளிவாகத்தெரிகிறது. எனவே, இனிவரும் காலங்களில் இந்தியாவுடனான உறவுகள் தொடர்ந்து வலுப்பெற்றுவரும் என நம்புகிறோம்.

ஆனால், சீனாவைப் பொறுத்தவரை எந்த இலக்கை நோக்கி அந்நாடு சென்றுகொண்டிருக்கிறது என்பது அவ்வளவு தெளிவாக இல்லை. ஏனென்றால் அந்நாடு கடைப்பிடித்துவரும் பொருளாதாரக் கொள்கைக்கும், அரசியல் முறைக்குமிடையே முரண்பாடு காணப்படுகிறது எனறு கூறினார் ரம்ஸ்பெல்ட்.

## நேபாளத்தில் கண்ணிவெடித் தாக்குதல் 50 பேர் பலி;70இற்கு மேற்பட்டோர் காயம்

நேபாளத்தில் பயணிகள் பேருந்து மீது நடத்தப்பட்ட நிலக்கண்ணிவெடித் தாக்குதலில்50 இற்கு அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாக அஞ்சப்படுகிறது.

நிலக்கண்ணிவெடிப்பின் தீவிரம் காரணமாக பலர் உடல் சிதறுண்டு உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேபாளத்தின் தென்பகுதியில் நடந்த இந்தத் தாக்குதலில் சுமார் 70 பேர் வரையில் காயமடைந்துள்ளதாக நேபாள இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

நேபாளத்தில் மன்னராட்சியை எதிர்த்து போராட்டம் நடத்தும் மாவோஜிஸ்ட் தீவிரவாதிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒன்பது ஆண்டுகளாக பொதுமக்கள் மீது கிளர்ச்சிக்காரர்கள் நடத்தும் தாக்குதலில் இதுவும் ஒன்றெனத் தெரிவிக்கப்படுகிறது.

## பிளாஸ்டிக் பைகளுக்கு பூட்டான் அரசு தடைவிதிப்பு

புகையிலை மற்றும் சிகரெட் பயன்படுத்துவதற்கு இமயமலை பகுதியில் தடை விதிக்கப்பட்ட நிலையில் பிளாஸ்டிக் பொருட்களுக்கும் பூட்டான் அரசு தடைவிதித்துள்ளது.

இது குறித்து பூட்டான் தேசிய சுற்றுச்சூழல் கமிஷன் துணை அமைச்சர் தஷோ மடேரின்சூ கூறியதாவது;

சுற்றுச்சூழலுக்கு மிக அதிக அளவில் கேடு உண்டாக்கும் பிளாஸ்டிக் பைகள்,ஐஸ்கிரீம் பவுச்சுகள் உட்பட அனைத்து பிளாஸ்டிக் பொருட்களுக்கும். தேசிய சுற்றுச்சூழல் ஆணையம் தடை விதித்துள்ளது. அவற்றுக்குப் பதில் எல்லோராலும் வாங்கி பயன்படுத்த வசதியாக பேப்பர் பைகள் பூட்டான் சந்தையில் கிடைக்க வழி செய்யப்படும். சுற்றுசூழலுக்கு கேடு விளைவிக்காத சணல் பைகளை இறக்குமதி செய்வது பற்றி இந்தியாவிலுள்ள சணல் பைகள் தயாரிக்கும் நிறுவனத்துடன் பேசிவருகிறோம். புகைப்பிடிப்பது சூயிங்கம் மெல்வது மற்றும் புகையிலை பொருட்களை பயன்படுத்துவதற்கு சமீபத்தில் தடை விதிக்கப்பட்டது. பூட்டானில் இருக்கும் பேப்பர் தொழிற்சாலைகளை அன்றாட உபயோகத்துக்கு ஏற்ற பேப்பர் பைகளை தயாரிக்க, ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்த, விற்கக் கூடாது என்ற தடைமிகக் கண்டிப்பாக அமுலில் இருக்கும். பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட வர்த்தகரின் அனுமதிப்பத்திரம தடை செய்யபபடும். தொடர்ந்து பயன்படுத்துவது தெரிந்தால் அபராதம் விதிக்கப்படும்.பிளாஸ்டிக் பைகளை கண்டிப்பாக இறக்குமதி செய்யக்கூடாது என்று எல்லையில் இருக்கும் சுங்க அதிகாரிகளுக்கு கூறப்பட்டுள்ளது . இவவாறு அவர் கூறினார்.

## எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி இங்கிலாந்து இளைஞர் சாதனை

மிக இளம் வயதில் எவரெஸ்ட் சிகரம் ஏறி சாதனை படைத்து இருக்கிறார் இங்கிலாந்தின் இளைஞர் ஜேக்மெய்யர். 21 வயதான இவர் பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல் அறிவியல் படித்து வருகிறார். இவர் எவரெஸ்ட் சிகரத்தை திபெத் பக்கம் இருந்து ஏறி அடைந்தார். 29 ஆயிரம் அடி உயரம் உள்ள எவரெஸ்ட் சிகரத்தை எட்டியதும் அவர் தொலைபேசி மூலம் குளு செஸ்டர்ஷைரில் உள்ள தந்தை ஹக்குடன் தொடர்பு கொண்டு பேசினார்.

எனக்கு கீழே உள்ள மொத்த உலகத்தையும் என்னால் பார்க்க முடிகிறது பிரமாதமாக இருக்கிறது'' என்று தந்தையிடம் கூறினார்.

ஜேக்மெய்யர் கடந்த ஆறு ஆண்டுகளாக மலை ஏறிவருகிறார்.

இவருடன் மலை ஏறும் சாகசக் கம்பெனியைச் சேர்ந்த டி-கில்பர்ட், நேபாள வழிக்காட்டிகள் மிங்மா ஷெர்பா,ஸ்ரீதர் அனில் பட்டரை ஆகிய மூன்று பேரும் சேர்ந்து மலை ஏறினர்.

எவரெஸ்ட் சிகரம் ஏறி சாதனை படைத்தவர்களில் இதுவரை வயதில் இளையவராக இருந்தவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 23 வயது பியர் கிரிலிங் தான்.இப்போது இந்தச் சாதனையை மெய்யர் முறியடித்திருக்கிறார்.

# அரசியல் துறை பணிமனையில் தேடுதல்;

# போராளிகளை இம்சைப்படுத்தும் செயல்!

## மட்டக்களப்பு மாவட்ட நிர்வாக சேவைப்பொறுப்பாளர் கண்டனம்

(மட்டக்களப்பு)

**"மட்டக்களப்பு தாமரைக்கேணி அரசியல்துறைப் பணிமனையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையானது போராளிகளை இம்சைப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே கருதுகிறோம்". இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைப்பொறுப்பாளர் தங்கையா தெரிவித்தார். சனிக்கிழமை இரவு சிறிலங்காப்படையினர் மற்றும் பொலிசார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:- சனிக் கிழமை இரவு பதினொரு மணியளவில் எமது அலுவலக கதவுகள் தட்டப்படும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்து பார்த்த போது சுமார் முப்பது ஆயுதம் தரித்த படையினர் நின் றனர். வீதியில் கவச வாகனங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட படை யினர் காணப்பட்டனர். உடனடியாக சமாதானச் செயலகத்துக்கும், அரசியல்துறைச் செயலகத்துக்கும் தெரிவித்தோம். அப்போது படையினர் அலுவலகத்தை சோதனையிட வேண்டும் எனத் தெரிவித்த போது போராளிகள் மறுத்துவிட்டனர். பொலிசாரே சோதனையிட வேண்டும். அதேநேரம் போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழு பிரதிநிதிகள் முன்னிலையில் தான் இவை நடைபெற வேண்டும் எனத் தெரிவித் தோம். இதன் பின்னர் கண்காணிப்புக்குழு பிரதிநிதி அவ்விடத்திற்கு அழைக்கப்பட்ட துடன் நான்கு பொலிசார் ஆயுதங்களின்றி சோதனைசெய்ததாகத் தெரிவித்தார். இச்சம்பவத்தின் போது அதிகளவிலான இராணு வப் புலனாய்வுப் பிரிவினர் சிவில் உடையில் காணப்பட்டதுடன் ராசிக்குழு உறுப்பினர்களும் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார். இசசம்பவத்தின் பின்னணியை நோக்குமிடத்து போராளிகளை இனங்காண்பது அலுவலகத்தின் அமைப்பை இனம் காண்பது போன்றவையே இதன் நோக்கமாகும் எனவும் கூறினார்.

-வீடு தீக்கிரையானதில்-

## எரிகாயங்களுக்குள்ளான பெண் சிகிச்சை பயனின்றி மரணம்

(மல்லாவி)

துணுக்காய் விநாயகபுரம் பகுதியில் கடந்த 30ஆம் திகதி வீடு ஒன்று எரிந்து சாம்பராகிய போது தீயில் சிக்கி எரிகாயங் களுக்குள்ளான நிலையில் பெண் ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக் காத நிலையில் உயிரிழந்துள்ளார். மேற்படி தீவிபத்தின் போது விநாயகபுரத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான நாகராசா ராஜேஸ்வரி (வயது-30) என்பவரே உயிரிழந்தவராவார். (24)

வலய மட்ட தமிழ்த்தினப்போட்டி

## முத்தையன்கட்டு வலதுகரை பாடசாலை முன்னணியில்!

((முல்லை)

முத்தையன்கட்டு வலதுகரை பாடசாலை வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியில் முன்னணி இடங்களைப்பெற்றுள்ளது. தமிழ்த்தினப்போட்டியில் இடை நிலைப்பிரிவில் கவிதைப் போட்டியில் மா. நிசாந்தன், சிறுகதைப் போட்டி யில் கா. அன்ரனி-கஜேந்திரன், மேற்பிரிவில் சிறுகதைப் போட்டியில் த.ராதை, கவிதைப் போட்டியில் வே. அருட்குமார் ஆகியோர் முதலாம் இடங்களைப்பெற்றுள்ளனர்.

அதேபோன்று மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் கபடி வலய மட்டப்போட்டி யில் முதலாம் இடத்தையும், வலயமட்டத்திலான ஆண்களுக் கான கால்பந்துப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. (20)

## நலன்புரி நிலைய கூரைத் தகடுகள் சுழிக்காற்றினால் தூக்கி வீசப்பட்டன!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சாஹிரா பாடசாலை நலன்புரி நிலைய முகாம் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் வீசிய சுழிக்காற்றில் கூரைத்தகடுகள் காற் றில் தூக்கி வீசப்பட்டுள்ளன. இதனால் முகாம் கொட்டில்கள் சேதமடைந் துள்ளன. தற்போது அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களின் கூரை கள் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் மாதங்களில் பருவப் பெயர்ச்சி காற்றுவீச ஆரம்பிக்கப்படுமாதலால் இந்தக் கட்டடக் கூரைகள் சேதமடையுமென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## ஐஸ்பழம் உட்கொண்டதால் பலர் வைத்தியசாலையில்!

திருக்கோவில் பிரதேசத்தில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் உட்கொண்டதால் சிறுவர்கள், பெரியவர்கள் எனப்பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். இவ்வாறான சம்பவங்களில் பெருமளவில் நலன்புரி நிலையங்களில் வசிக்கும் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை பாதிக்கப்படுகின்றனர்.


இவர்கள் அங்கீகரிக்கப்படாத ஐஸ்கிறீம், ஐஸ்பழம் உட்கொண்டதால் வாந்திபேதியாலும், வயிற்றுப் போக்காலும் நோய்வாய்ப்பட்டு திருக்கோவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# கிழக்கில் கடும் வெப்பநிலை இடம்பெயர்ந்த மக்கள் அவலம்!

## நோய்களும் பரவும் அபாயம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் தற்போது கடும் வெப்பநிலை நிலவுகின்றது. பகல் நேரத்தில் கடுமையான வெயில் எறிப்பதனால் மக்கள் வீடு களை விட்டு வெளியேறுவதில் சிரமங்களை அனுபவித்து வருகின்ற னர். சுனாமி அனர்த்தத்தால் இடம் பெயர்ந்து தற்காலிக கூடாரங்களில் வசித்து வருகின்ற மக்கள் இந்தக் கடும்வெப்பநிலை காரணமாக பெரும் அசௌகரிய நிலைக்கு உட்பட்டுள் ளனர். காற்றோட்ட வசதிகள் இல் லாத நெருக்கமாக அமைக்கப்பட்ட சிறிய தற்காலிக கூடாரங்களில் வசித்து வருகின்ற மக்கள் தற்போது நிலவுகின்ற கடும் வெப்பம் காரண மாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட் டுள்ளனர். பகல் வேளைகளில் கடுமையான வெப்பத்துடன் கூடிய அனல் காற்று வீசுவதனால் இவர் கள் மிகுந்த சிரமங்களை அனுப விக்க வேண்டியுள்ளது. இங்கு மழை வீழ்ச்சி வெகுவாகக் குறைவடைந்து கடுமையான வறட்சி ஏற்பட்டிருப்பத னால் கிழக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களில் குடிநீருக்கு அதி களவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் இந்தக் கடுமையான வெப்பநிலை கார ணமாக கால்நடைகளுக்கான மேய்ச் சல் நிலங்கள் வரண்டு புல், பூண்டு கள் கருகிப்போயுள்ளன. இதனால் கால்நடைகள் உணவு இன்றியும், குடிப்பதற்கு நீர் இன்றியும் அவஸ்த் தைப் படுகின்றமையும் குறிப்பிடத் தக்கது. மேலும் வெப்பமான கால நிலை காரணமாக வியர்குரு, இருமல், கண்நோய், தொண்டை நோய், வாய்ப்புண், காய்ச்சல் ஆகிய நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகரித்திருப்பதாக வைத் திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



பூநகரி சுட்டதீவு கடற்கரைக்கு இரு டொல்பின்களால் இழுத்து வரப்பட்ட சூட்டுக் காயங்களுக்குள்ளாகி மரணமான டொல்பினையும் மேற்படி இரு டொல்பின்களும் மீளவும் கடலுக்குள் செல்ல மக்களால் உதவியளிக்கப் பட்டபின் அவை நீந்திச் செல்வதனையும் படங்களில் காணலாம். (படம்- பிரதீபன், சசி)

## கிரவல் மண் குவியல்கள் போக்குவரத்திற்கு இடையூறு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஆலங்குளம் கொக் காவில் வீதி புனரமைப்பிற்காக பறிக் கப்பட்ட கிரவல் மண்குவியல்களி னால் மக்கள் பிரயாணம் மேற் கொள்ளமுடியாது பெரிதும் கஷ் ரத்தை எதிர்நோக்கி வருகின்றனர். அண்மையில் வீதிப்புனரமைப் பிற்காக கிரவல் மண் பறிக்கப்பட்ட போதும் இற்றை வரையும் வீதிபுனர மைக்காமையினால் மக்கள் போக்கு வரத்தில் பெரும் சிரமத்தை எதிர் நோக்குவதினால் வீதியைப் புனர மைக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுள்ளனர். (24)

## இன்று நேர்முகத் தேர்வு

முல்லைத்தீவு தொழில் நுட்பக்கல்லூரியில் தொழில் பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. எனவே விண்ணப்பித்த அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (05)

## வீதியை புனரமைத்து தர பொதுமக்கள் வலியுறுத்து

(வட்டக்கச்சி)

மாவடி அம்மன் ஆலயம் முன்பாக செல்லும் இராமநாத புரம் பிரதான வீதிமிகவும் மோசமான நிலையில் போக்கு வரத்துக்கு இடையூறாக காணப்படுகின்றது.

இராமநாதபுரச் சந்தியில் இருந்து சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூர வீதி நீண்டகாலமாக புனரமைப்புவேலைகள் எதுவும் நடைபெறாத நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் இவ்வீதி முக்கிய வீதியாகவும் உள்ளது.

மழைக்காலங்களில் இராமநாதபுரம், கல்மடு போன்ற பிர தேச மக்கள் வட்டக்கச்சி பொதுச் சந்தைக்கும் மற்றும் அன்றாட தேவைகளுக்குச் செல்லும் வீதியும் இதுவே ஆகும். இவ்வீதி யின் குறுக்காக மழைக்காலங்களில் நீர் தொடர்ந்து பாய்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனால் போக்கு வரத்துக் கள் தடைப்படும் வாய்ப்புகளே அதிகமாகவுள்ளன. அத்துடன் இவ்வீதி பழைய கண்டி வீதியை இணைக்கின்றது இவ்வீதியை முறையில் புனரமைப்பு செய்து தருமாறு மக்கள் கேட்டுக் கின்றனர். (12)

# மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கலைவாணி சவாரித் திடலில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நேற்று முன்தினம் இரண்டு மணியளவில் இடம் பெற்றது.

வட்டக்கச்சி,இராமநாதபுரம் மக்களும், வட்டக்கச்சி லக் கிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் இணைந்து போட்டியை நடத்தினர்.

அ, ஆ, இ, ஈ, என நான்கு பிரிவுகளாக போட்டிகள் இடம் பெற்றன. மங்கல விளக்கினை பிரதேச அரசியல் துறையைச் சேர்ந்த இராமஜெயமும் கிளிமாவட்ட சவாரிச் சங்கத் தலைவர் ஐயம்பிள்ளையும் ஏற்றிவைக்க. தேசியக் கொடியினை தமிழீழ வீதிப்போக்குவரத்துப் பொறுப்பாளர் சிவகுமாரன் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின.

ஆரம்பமான போட்டியில்

அ. பிரிவில்:- முதலாம் இடம் மு.செந்தில்குமார்-பிரமந்தனாறு, இரண்டாம் இடம்- சி.பாலுஜன் வற்றாப்பளை, மூன்றாம் இடம்- இ.அப்பன் உடையார்கட்டு, ஆ.பிரிவில்:- முதலாம் இடம் க.சிறிகரன் பூநகரி, இரண்டாம் இடம் க.சுஜீவன் தட்டுவன் கொட்டி, மூன்றாம் இடம் அ.ஜோர்ஜ் ஜெயசீலன் பன்னங்கண்டி, இ.பிரிவில்:- முதலாம் இடம் ஆ.ஜேசுரட்ணம் பன்னங்கண்டி, இரண்டாம் இடம் சி.நவநீதன் கட்சன் வீதி, மூன்றாம் இடம்



சி.கபில் வட்டக்கச்சி,

ஈ பிரிவில்:- முதலாம் இடம் மு.செந்தில் குமார் பிரமந்த னாறு, இரண்டாம் இடம் த.ஜெகன் விசுவமடு, மூன்றாம் இடம் வே.பிரபாகரன் ஊரியான். ஆகியவர்களின் காளை சோடிகளே வெற்றியை தமதாக்கி பரிசில்களை தட்டிச் சென்றன. அடுத்த சவாரியானது எதிர்வரும் 12 ஆம் திகதி புதிதாக அமைக்கப்பட்ட விசுவமடுச் சவாரித்திடலில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

# இன்றைய சூழலை எதிர்கொள்ள தமிழ் மக்கள் தயாராக வேண்டும்

## கொடிகாமம் அரசியல்துறைப் பொறுப்பாளர்

(தென்மராட்சி)

**துப்பாக்கிகள் ஓய்வு கொள்ளும் காலத்தில் எமது உரிமைகள் தொடர்பான கருத்துக்கள், அரசபயங்கரவாதிகளால் எவ்வாறு நோக்கப்படுகின்றன என்பதை மக்கள் அறிவீர்கள். இந்தச் சூழலை எதிர்கொள்ள மக்கள் தயாராக வேண்டுமென கொடிகாமம் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் இரத்தினம் தெரிவித்துள்ளார்.**


நேற்று முன்தினம் வரணியில் இடம் பெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்படியான விழிப்புணர்ச்சியே எமது இனத்தையும், எமது போராட்டத்தையும் அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கு எம்மை உந்தித்தள்ளியுள்ளது.

கடந்த காலங்களில் இத்தகைய போர் ஓய்வு காலத்தில் நாம் சந்தித்த பல அனுபவங்கள், ஆளும் இனவாத அரசும் அதன் படைகளும் வலிந்து மக்கள் மீது ஒரு யுத்தத்தை திணித்து படுகொலைகளைப் புரிந்து வந்துள்ளதையும், அதன் தொடர்ச்சியாக சமாதான முயற்சிகள் தவிடு பொடியாகி மீண்டும் இவற்றை எதிர்கொள்ள நாம் தயாரானதும் எமது தாயக விடுதலையின் வரலாற்றுப் பாடம் ஆகும்.

மீண்டும் அப்படியான ஒரு சூழலை நோக்கி பௌத்த இனவெறி வேகம் பெற்றிருப்பது காலத்தின் தேவையை மீண்டும் உணர்த்தி இருக்கிறது. அத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்ள மக்கள் தயாராக இருக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (28)

## உயர்கல்வி கற்கும் வறிய மாணவருக்கு மாணவர் பேரவை ஈருருளி அன்பளிப்பு




யாழ்.பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியை மேற்கொண்டு வருகின்ற பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்ற மாணவர்களுக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் கட்டம் கட்டமாக ஈருருளிகளை இலவசமாக வழங்கிவருகின்றனர். அதில் ஒரு கட்டமாக கடந்த சனிக்கிழமை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாக ஈருருளிகள் வழங்குவதனைப் படத்தில் காணலாம்.

## வலி.தென்மேற்கு அகதிமுகாம்களில் பொது மலசல கூடங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள இடம் பெயர்ந்தோர் அகதிமுகாம்களின் பொது மலசல கூடங்கள் பலவும் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாக வலி. தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 12 இடம் பெயர்ந்தோர் நலன்புரிநிலையங்கள் உள்ளன. இவற்றிலுள்ள பொது மலசலகூடங்கள் பலவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இதனால் இவ்அகதிமுகாம்களில் பெரும் சுகாதாரப்பதிப்புகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள பிரதேச செயலாளர் இவற்றில் சிலவற்றைப் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (33)

## பனைமரங்களை அழிக்கும் படையினரின் செயல்குறித்து மாதகல் மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாதகல் பகுதியில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தனியார் காணிகளிலிருந்து இராணுவத்தினரால் பயன்தரு பனைமரங்கள் தறித்தழிக்கப்படுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

1995 ஆம் ஆண்டிலிருந்து யாழ். மாதகல் பகுதியிலுள்ள பாரிய நிலப்பிரதேசங்களை இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாக ஆக்கிரமித்து வைத்திருக்கும் படையினர், அப்பகுதி தனியார் காணிகளிலுள்ள பயன்தரு பனைமரங்களைத் தறித்தழிக்கின்றனர்.

இராணுவத்தினர் தமது முகாம்களையும், காவலரண்களையும், பதுங்குகுழிகளையும் அமைப்பதற்காக இப்பகுதி தனியார் காணிகளில் இருக்கும் பயன்தரு பனைமரங்களைத் தறித்து குற்றிகளாக்கிப் பயன்படுத்துவதாகக் குற்றம் சாட்டும் இப்பகுதி மக்கள், இராணுவத்தினரின் இச் செயற்பாடுகளால் தமது சந்ததிகள் பாதிக்கப்படும் அபாயம் தோன்றியிருப்பதாகவும், பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் காணிகளின் உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

## வீதி ஒழுங்கை மீறும் மாணவர்கள் மீது அதிபர்களூடாக ஒழுக்காற்று நடவடிக்கை

### -யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் பொலிசார் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வீதிப்போக்குவரத்து விதிமுறைகளை மீறிச்செயற்படும் பாடசாலை மாணவர்கள் மீதும், சிறிலங்கா பொலிசாரால் கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் வீதிகளில் பயணிக்கும் போது வீதி ஒழுங்குகளை மீறிச்செயற்படும் பாடசாலை மாணவர்கள் உடனடியாகவே கைது செய்யப்பட்டு அவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளின் அதிபர் முன்னால் முற்படுத்தி அதிபர்கள் மூலமாகவே அவர்கள் மீது ஒழுககாற்று நடவடிக்கைகளை எடுப்பது என்றும் அதிபர்கள் மூலமான இவ் ஒழுக்காற்று நடவடிக்கைகளை கருத்திலெடுக்காது தொடர்ந்தும் வீதிப்போக்குவரத்து விதிமுறைகளை மீறிச்செயற்படும் மாணவர்கள் மீது நீதிமன்றங்கள் மூலமாக சட்டநடவடிக்கைகளை எடுப்பதென்றும், சிறிலங்கா பொலிசார் அறிவித்துள்ளனர்.

அத்துடன் யாழ்.குடாநாட்டில், மிதிபலகை பயணம்,வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளை சமாந்தரமாக ஓட்டிச்செல்லுதல் எனப் பாடசாலை மாணவர்களே அதிகளவிலான வீதி ஒழுங்கு மீறல்களிலும், ஈடுபடுகின்றனர் எனவும் பொலிசார் சுட்டிக்காட்டியுள்ளனர். (33)

## நியாப் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய கொக்குவில் வடமேற்கு கிராமம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் வடமேற்கு கிராமம் நியாப் திட்டம் II இன் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இந்த அடிப்படையில் மேற்படி கிராமத்திலுள்ள பல உள்ளூர் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதுடன் இக் கிராமத்தில் வாழும் வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்கள், கணவன்மாரை இழந்த பெண்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எனப் பொருளாதாரப் பாதிப்புகளுக்குள்ளானவர்களிற்கு சுயதொழில் மேம்பாட்டு உதவிகளும் வழங்கப்படவுள்ளது.

இப்பகுதி வாழ் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டே இத்திட்டம் அமுல் செய்யப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (33)

## திருமலை சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை தமிழ் கூட்டமைப்பினர் பார்வையிட்டனர்

(அலுவலக செய்தியாளர்)

திருமலையில் புத்தர்சிலை விவகாரத்தின் பின் நடைபெற்ற அசம்பாவிதங்களின் போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு திருமலை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களை பாராளுமன்ற உறுப்பினர்களான துரைரெட்ணசிங்கம், சிவாஜிலிங்கம், சிவனேசன், பத்மினிசிதம்பரநாதன், தமிழ் மக்கள் பேரவைத்தலைவர் விக்னேஸ்வரன், திருமலை மாவட்ட மீனவ அமைப்புக்களின் பொறுப்பாளர் கௌரிமுகுந்தன் ஆகியோர் சென்று பார்வையிட்டுள்ளனர்.

அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த நால்வரில் இருவா விடுதலை செய்யப்பட்டும் இருவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களைப் பார்வையிடச் சென்ற குழுவினர் இரு இளைஞர்களுடன் உரையாடி அவர்களின் நிலைமைகளை கேட்டறிந்து கொணடு பின் இராணுவத்தினராலும் கடற்படையினராலும் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் திருமலை வைத்தியசாலை அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள இருவரையும் பார்வையிட்டு சந்தித்து உரையாடியுள்ளனர். இவர்களில் சத்தியசீலன் (வயது-23) என்பவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. ரவி (வயது-18) என்பவரின் கால் ஒன்று முற்றாக அகற்றப்பட வேண்டிய நிலையிலுள்ளது. மேலும் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் பிரபாகரன் எனும் இளைஞரையும் பார்வையிட்டு உரையாடியுள்ளனர் பிரபாகரனை இராணுவத்தினர் தாக்கிய பின் பெற்றோல் உற்றி உயிருடன் எரிக்க முற்பட்ட வேளை அவர் தப்பியோடி வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் திருமலை பத்தாம் நம்பர் பிரதேசம் வீரநகர் திருக்கடலூர் பத்திரகாளி அம்மன் பகுதி பாலையூற்று ஆகிய இடங்களையும் பார்வையிட்ட குழுவினர் தாக்குதலுக்குள்ளான இளைஞர்களின் வீடுகளுக்கும் சென்று ஆறுதல் கூறியுள்ளனர். (சு)

## ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்கான உலருணவுப் பொருள் விநியோகம் நிறுத்தம்!

### - தமிழ் பிரதேச மக்களுக்கு அவலநிலை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவு முத்திரைக்கான உலர் உணவுப் பொருள் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பிரஸ்தாப மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. உலக உணவுத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சனவரி மாதமிருந்து உணவு முத்திரை மூலம் ப.நோ.கூ. சங்கங்களினூடாக இரு வாரங்களுக்கு ஒருமுறை இவ்வுணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வந்தமை தெரிந்ததே. 32 புள்ளிகளைக் கொண்ட உணவுப் பங்கீட்டு அட்டையில் ஒற்றை இலக்கங்களில் வரும் 16 புள்ளிகள் சமுர்த்தி வங்கியினூடாக ரூபா இருநூறும் இரட்டை இலக்கங்களில் வரும் 16 புள்ளிகள் ப.நோ.கூ. சங்கங்களினூடாக ரூபா 175க்கு உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டு வந்தது. வாரத்திற்கு இரு புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டு வந்தமையால் அச் சுனாமிப் பங்கீட்டு அட்டையும் முடிவடைந்துள்ளது. இதனடிப்படையில் அட்டை முடிவடைந்துள்ள நிலையில் அதிலுள்ள சுமார் ஐந்து புள்ளிகளுக்கான உணவு இன்னும் பல பிரதேசங்களுக்கு வழங்கப்படவில்லை. ப.நோ.கூ. சங்கங்கள் உரிய வேளையில் அதற்குரிய ஆவணங்களுடன் அம்பாறை கச்சேரியிலுள்ள களஞ்சிய சாலையிலிருந்து பெறவில்லையென்பதே இப்பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமெனக் கூறப்படுகிறது. இத் துரதிஷ்ட நிலை அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசங்களுக்கே ஏற்பட்டுள்ளது. முஸ்லிம் பிரதேச ப.நோ.கூ. சங்கங்கள் உரிய காலத்தில் இவ்வுணவுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டதனால் 164 புள்ளிகளுக்குமான உணவுகள் வழங்கப்பட்டுவிட்டன. அதனால், தமிழ்ப் பிரதேச ங்களில் கடந்த ஐந்து புள்ளிகளுக்கான உணவுப் பொருட்கள் வழங்கப்படவில்லை. உதாரணமாக காரைதீவுப் பிரதேச செயலகப் பகுதியில் சுமார் பத்தாயிரம் பேர் இந்த ஐந்து புள்ளிகளுக்கான உணவுகளைப் பெறவில்லை. தற்போது களஞ்சியசாலையில் இவ் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதனால் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் ஒருநேர உணவை உண்ண வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எழுந்துள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசியலாளர்கள் கவனிப்பார்களா என மக்கள் வினா எழுப்புகின்றனர்.

## கடற்றொழில் உபகரணம் வழங்கல்


(முல்லை)

எக்கோ கெயர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் முல்லை மக்கள் நலன்புரிச் சங்கத்தினரால் செம்மலை கிழக்கு கிராமத்தில் 38 பயனாளிகளுக்கு கடற்றொழில் உபகரணங்கள் கடந்த 29ஆம் திகதி வழங்கப்பட்டது. இதில் ஒரு பயனாளிக்கு 20 ஆயிரம் பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன. இக்கிராம மக்கள் சுனாமி அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (20)

# காஷ்மீருக்கு சுயாட்சி

# மன்மோகன்சிங்கை நம்பலாமா?

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக இழுபறியில் இருந்து வந்த காஷ்மீர் விவகாரம் புதிய பாதையில் திரும்பும் போல் நிலைமைகள் புலப்படுத்தி நிற்கின்றன. காஷ்மீர் விவகாரம் தான் இந்திய பாகிஸ்தான் சமாதானத்திற்கு முட்டுக்கட்டை என்பது உலகறிந்த விடயம். ஆனால் இன்று அதே காஷ்மீரே இந்தியாவையும், பாகிஸ்தானை




யும் ஓரம் கட்டி தாமே தமது பிரசசினைகளை தீர்த்துக் கொள்ள புறப்பட்டு விட்டதாகவே தான் நம்பத் தோன்றுகின்றது.

இந்திய -பாகிஸ்தான் கீழ் மட்டம் முதல் உயர் மட்டம் வரை நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் சுமுகமாக இதுவரை முடிந்ததில்லை. ஏனெனில் அப்போதெல்லாம் காஷ்மீர் விவகாரமே சிக்கலை ஏற்படுத்தி வந்திருக்கின்றது. இதனால் தான் இரு நாடுகளும் அண்மைக் காலங்களில் காஷ்மீர் விவகாரத்தை விடுத்து ஏனைய பிரச்சினைகளை விவாதித்திருக்கின்றன.

இந் நிலையில் காஷ்மீர் விவகாரத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றே தான் கூற வேண்டும். அந்த வகையில் ஜம்மு காஷ்மீரின் மிதவாதத் தலைவர்கள, ஆஸாத் காஷ்மீருக்கு அதிரடி விஜயம் மேற்கொண்டிருக்கின்றனர். அதாவது இரு காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்களுமே காஷ்மீர் விவகாரத்தை தீர்த்துக் கொள்ளப் புறப்பட்டு விட்டார்கள் என்று தான் கூற வேண்டும்.

ஏற்கனவே ஹுரியத் மாநாட்டு




அமைப்பானது ஆஸாத் காஷ்மீருக்கு விஜயம் மேற்கொள்ள மத்தியரசிடம் அனுமதி கோரியிருந்தது. ஏற்கனவே காஷ்மீர் விவகாரத்தால் தலைவலி சுமந்த மத்தியரசு ஹுரியத் மாநாட்டு தலைவர்களுக்கு அனுமதி வழங்க முன் வரவில்லை என்று தான் நம்ப வேண்டும். இருந்த போதும் ஹுரியத் மாநாட்டின் தொடர் வற்புறுத்தலையொட்டி மத்தியரசு அனுமதி வழங்கியது.

அதாவது ஆஸாத் காஷ்மீருடன் மட்டுமே ஹுரியத் அமைப்பு திரும்பி விட வேண்டும். அதையும் தாண்டி பாகிஸ்தானுக்குள் பிரவேசிக்க தடை விதித்தே சம்மதம் வழங்கியிருந்தது.

இந்த அனுமதியினை அடுத்து மீர்வாய்ஸ் மௌலவி உமர்பாரூக் தலைமையில் ஒன்பது பேர் அடங்கிய குழு ஆஸாத் காஷ்மீர் பயணமானது. காஷ்மீரின் இரு பகுதியினருக்கும் இடையேயுள்ள அமைதிப் பாலத்தை இக் குழு கடந்ததும் பாகிஸ்தான் இராணுவம் இசைவாத்தியம் முழங்க வரவேற்றுள்ளது.

இதனையடுத்து இரு காஷ்மீரியர்களும் பிரிந்தவர்கள் கூடினால் பேசவும்


சோனியா

தோன்றுமோ... என்பது போன்று, கை கலந்துள்ளனர். காஷ்மீர் பிரச்சினைக்கு தாமே தீர்வு காண வேண்டுமென்றும் அதன மூலமே தான் இந்தியா பாகிஸ்தான் உறவு மேம்படும் என்றும் இரு காஷ்மீர் தலைவர்களும் கருத்துப் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

இதனையடுத்து முஷாபராத் சட்ட மன்றத்தில் ஹுரியத் குழு உரையாற்றியுள்ளது. இங்கு தான் முதன் முதல் வில்லங்கம் உருவாகியது எனலாம்.

அதாவது ஹுரியத் கூட்டமைப்பு தலைவர் மீர்வாய்ஸ் முஷாபராத் சட்ட மன்றத்தில் உரையாற்றும் போது காரசாரமாக ஆஸாத் காஷ்மீர் மீது குற்றச் சாட்டுக்களை அடுக்கியுள்ளார்.

* தீவிரவாதம் ஆஸாத் காஷ்மீரில் பெருகி வருகின்றது.

* தீவிரவாதத்தை ஆஸாத் காஷ்மீர் ஆதரிக்கின்றது.

*இதனால் இளைஞர்கள் பரிதாபமாக உயிரிழக்கின்றார்கள்.

எனவே தீவிரவாதம் வளர்க்கப்படுவது தடுக்கப்பட வேண்டுமென்பதே ஹுரியத் தலைவரின் பிரதான கருத்தாக வலியுறுத்தப்பட்டது.

இதனைக் கேட்ட ஆஸாத் காஷ்மீர் ஆளுநர் சிக்கந்தர் அயத்கான் பெரும் அதிர்ச்சியை வெளிக்காட்டியுள்ளாரே தவிர எதனையும் நிராகரிக்கவோ மறுப்புக் கூறவோ இல்லை என்பது கவனிக்கத் தக்கது.

அதுமட்டுமன்றி ஹுரியத் மாநாட்டு குழு ஆஸாத் தாண்டி இஸ்லாமாபாத் விரைந்துள்ளனர் என்பது இந்தியாவுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே இஸ்லாமாபாத் செல்லக் கூடாது என்று தடை விதித்தே இந்திய மத்தியரசு ஹுரியத் குழுவிற்கு ஆஸாத் காஷ்மீர் செல்ல அனுமதி வழங்கியிருந்தது.

ஆனால் ஹுரியத் குழுவோ இந்திய மத்தியரசின் தடையினை உடைத்துக் கொண்டு இஸ்லாமாபாத் விரைந்திருப்பது அடுத்த ஓர் வில்லங்கம் தான்!

இதேவேளை ஹுரியத் குழு, இஸ்லாமாபாத் விரைந்துள்ள அதேவேளை பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் ஐக்கிய அரபு எமிரேட் கட்டார் பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணத்தை தற்செயலானதா முன்பே திட்டமிட்டதா... அல்லது ஹுரியத் குழுவை சந்திக்காமல் இருப்பதற்கான தப்பி ஓட்டமா.. என்பது சந்தேகத்தை ஏற்படுத்தாமலில்லை.

ஏனெனில் காஷ்மீர் விவகாரத்தை இந்தியாதான் சரியான விதமாக அணுகவில்லை என்றும், காஷ்மீர் சிக்கல் தீராத வரை இந்திய பாகிஸ்தான் சமாதானம் சாத்தியமில்லை என்று எச்சரிக்கை மணி அடித்து வந்த முஷாரப் இப்போது ஹுரியத் குழுவை தவிர்த்திருப்பது திட்டமிட்டே தான் என்பது ஒரு சாரார் கருத்து.

இல்லையேல் முஷாரப் ஹுரியத் குழுவை ஏன் சந்திக்காமல் நழுவ வேண்டும்...? எனும் வினாவுக்கு முஷாரப் பதிலளிக்காத வரை அது புதிராகவே தான் இருக்கும். இவற்றிடையேதான் காஷ்மீருக்கு சுயாட்சி அல்லது தன்னாட்சி வழங்கவேண்டுமென்று முதன் முதலாக இந்தியா திருவாய் மலர்ந்திருக்கின்றது.

அதுவும் ஹுரியத் குழுவினர் ஆஸாத் காஷ்மீர் தாண்டி பாகிஸ்தானுள் பிரவேசித்திருக்கும் போதேதான் பிரதமர் மன்மோகன் சிங் இவ்வாறு கூறியுள்ளார் என்பது கவனிக்கத் தக்கதோர் விடயமாகும்.

அது மட்டுமன்றி சர்வதேச நாடுகளை சேர்ந்தவர்களின் கண்காணிப்பின் கீழ்தான் சுயாட்சி வழங்கப் படவேண்டுமென்று மேலும் பிரதமர் மன்மோகன்சிங் பேட்டியளித்துள்ளார்.

இதேவேளை ஹுரியத் மாநாட்டு அமைப்பும் இதனைத்தான் விரும்புகின்றது. ஆக.... இந்தியா தமது வசமுள்ள ஜம்முகாஷ்மீரைச் சுயமாக இயங்க விடத் தயாராகி விட்டது.(?) போல் தான் பிரதமரின் கூற்று பறைசாற்றுகின்றது.

ஆனால் இதனை எதிர்க்கட்சியான தேசிய ஜனநாயக கூட்டணி எவ்வாறு ஆதரிக்கப் போகின்றது என்பது பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகும். ஏற்கனவே மன்மோகன்சிங்-முஷாரப்புடன் டில்லியில் பேச்சுவார்த்தை நடத்தியதையே எதிர்க்கட்சி விரும்பவில்லை.

அது மட்டுமன்றி ஆக்கபூர்வமான எதையும் பிரதமர் முஷாரப்புடன் விவாதிக்கவில்லையென்று பக்கம் பக்கமாக அறிக்கைவிட்டமையும் இருக்கின்றது.

இந்த நிலையில் ஜம்முகாஷ்மீருக்கு சுயாட்சி வழங்க பிரதமர் விருப்பம் வெளியிட்டுள்ளமை தெரியவரும் போது பெரிய களேபரமே ஏற்பட வாய்ப்பிருக்கின்றது எனலாம்.

பிரதமரின் நிலைப்பாட்டிற்கு எதிர்க்கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கும் அதேவேளை இரு அவைகளையும் கூடமுடக்க முற்படக் கூடும் என்பதில் சந்தேகமில்லை என நம்பமுடியும்.

மறுபுறம் பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை காணாமல் நாடு திரும்புவதில்லை என்பது போன்றேதான் ஹுதரியத் அமைப்பு


வாஜபாய்

அங்கு முகாமிட்டிருக்கின்றது.

எனவே முஷாரப் எப்படியும் ஹுரியத் குழுவை சந்தித்தேதான் ஆக வேண்டும். ஆஸாத் காஷ்மீர் குறித்து வாய் திறந்துதான் ஆகவேண்டும். எனவே ஆஸாத் காஷ்மீர் விவகாரம் குறித்து முஷாரப் என்னதான் கூறப்போகின்றார்.... என்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ள ஒன்றாகும்.

என்றாலும் முஷராப் ஜிகாத் அமைப்பிற்கு கட்டுப்பட்டவர் என்ட்து வெளிவராத தகவல். ஜிகாத் அமைப்பின் விருப்பம் எதுவோ அதுவே அவரது சொல்லும் செயற்பாடுமாக இருக்கும் என்பதும் வெளிவராதவைதான்!

ஆனால் இப்போது ஹுரியத் குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்றுள்ளவர் ஜிகாத் அமைப்புடன் நெருங்கிய தொடர்புடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மக்களிடமும் பெரும் ஆதரவு பெற்றுள்ளவர் என்பதும் கவனிக்கத் தக்கதோர் விடயமாகும்.

எனவே இரு காஷ்மீர் பிரிவினை

**அ. கலைவாணி**

தலைவர்களும் தமக்குள் தாமே கூடி முடிவெடுத்து விட்டு இருநாடுகளுக்கும் அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனலாம். இதுவரை காலமும் (ஆஸாத் காஷ்மீர்) ஜிகாத் அமைப்பே பாகிஸ்தானில் நடைபெறும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பின்னால் இருந்து வருகின்றது. அந்தளவு தூரத்திற்கு ஜிகாத் அமைப்பு பாகிஸ்தான் தளத்தில் வேரூன்றிவிட்டது என்றே பரவலாக கூறப்படுவதுண்டு.

இல்லையேல் ஜிகாத் அமைப்பு பாகிஸ்தான் சனாதிபதியை கொலை செய்ய முயற்சி மேற்கொண்டமை இயலாத காரியமாகி இருந்திருக்கும்.

எனவே ஹுரியத் மாநாட்டுக் குழுவும் ஜிகாத் அமைப்பும் என்ன முடிவு செய்யவுள்ளன..... இந்தியா-பாகிஸ்தான் சமாதானம் முன்னேற்றப் பாதையில் நகருமா......சறுக்குமா..... என்பதெல்லாம் காஷ்மீர் விவகாரத்தை சுற்றித் தான் பின்னிப் பிணைந்திருக்கின்றது. என்றால் மிகையில்லை.




# அண்ணன் என்ன... தம்பி என்ன....

**மைக்கேல்** சூமாக்கர்.. பார் முலா ஒன்று பந்தயத்தில் தூள் கிளப்பியவர். இப்போதோ மனிதருக்கு நேரம் சரியில்லை. எதைச் செய்தாலும் பிரச்சினையில் தான் முடிகிறது மொனாகோ ரேசில் சொந்த தம்பி ரால்பை உரசிக்கொண்டு செல்ல குடும்பத்தில் பெரும் குழப்பமே உருவாகிவிட்டது. ஒரு மில்லி மீற்றர் தடுமாறி இருந்தாலும் யாராவது ஒருவர் மரணம் அடைந்திருப்போம் என அண்ணனைத் திட்டிதீர்க்கிறார் ரால்ப். இப்படி சகோதரர்கள் சண்டை போட்டுக் கொள்ளும் அளவுக்கு மொனாகோ பந்தயத்தில் என்ன தான் நடந்தது... ஏன் அவ்வளவு வேகமாக காரை ஓட்டினார்.



ஜேர்மனியின் மைக்கேல் சூமாக்கர் (வயது-36) பார்முலா ஒன்று கார் பந்தயத்தில் முந்த முடியாத வீரராக திகழ்ந்தார். ஏழு முறை உலக சம்பியன் பட்டம் வென்ற பெருமை மிக்கவர். இவரது தம்பி தான் ரால்ப் சூமாக்கர்(வயது- 31) அண்ணன் வழியில் இவரும் கார்பந்தயத்தில் களமிறங்கினர். பெராரி அணிக்காக மைக்கேலும் டொயாட்டோ அணிக்காக ரால்பும் பங்கேற்று வந்தனர். இந்த ஆண்டு மைக்கேலுக்கு பின்னடைவு அவுஸ்திரேலியன் கிராண்ட்பிரிக்ஸ் தொடங்கி பர்சிலோனா வரை தொடர்ந்து ஐந்து போட்டிகளில் தோற்றார்.

ஆறாவது சவாலாக சமீபத்திய மொனாகோ பந்தயத்தில் கலந்து கொண்டார். இப்போட்டியில் எப்பாடுபட்டாவது வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்.78 சுற்றுகள் கொண்ட போட்டி இது . ஒவ்வொரு சுற்றிலும் ரால்ப் அதி வேகமாக பறந்து கொண்டிருந்தார். அதிர்ந்தார்அண்ணன். தனது வேகத்தை அதிகரித்தார்.மணிக்கு 180 மைல் வேகத்தில் விரட்டினார்.

இருவரும் நெருங்கிச்செல்ல எங்கும் பதட்டம் கடைசி சுற்றும் வந்தது. இப்போது ரால்ப் தொட்டு விடும் தூரத்தில் சென்று கொண்டிருந்தார். விலத்திச் செல்ல முடியவில்லை. இனி ரிஸ்க் எடுப்பதை தவிர வேறு வழியில்லை என்று முடிவுக்கு வந்தார் மைக்கேல். உடனே தடுப்பு வேலிக்கும் ரால்ப் காருக்கும் இடையில் மின்னல் வேகத்தில் புகுந்தார். ஆடிப்போனார் ரால்ப். இருவரது காரும் உரச அசம்பாவிதம் நேர்ந்து விடுமோ என்ற அச்சம்நிலவியது.ஆனால், தனது காரை சாதுரியமாக வளைத்த ரால்ப் ஆறாவது இடத்தைப்பெற்றதோடு ஆபத்தில் இருந்தும் தப்பினார்.பெரிய அளவில் முயன்றும் ஏழாவது இடத்தையே மைக்கேலால் பெற முடிந்தது.

போட்டி முடிய காத்திருந்தார் ரால்ப்.அண்ணன் செயல்பற்றி திட்டித் தீர்த்தார் மைக்கேலுக்கு சுத்தமாக மூளையே இல்லை. எனது காரை உரசிக்கொண்டு போனபோது. டயர் வெடித்து இருந்தால் இருவரும் தூக்கி எறியப்பட்டு மரணம் ஏற்பட்டிருக்கும். உயிரைப் பறிகொடுப்பதற்காகவா பந்தயத்தில் பங்கேற்கிறோம் என்று காட்டமாகக் கேட்டார்.இதற்கு கூலாக பதில் சென்னார் மைக்கேல். கடைசிச் சுற்றில் ரால்பை முந்த ஒரு வினாடிக்கு குறைவான நேரம் தான் தேவைப் பட்டது.அதனாலேயே முயன்று பார்த்தேன். நான் பந்தயத்தில் பங்கேற்கவே வந்தேன். ரேஸ் என்று வந்து விட்டால் யாருக்காகவும் எதையும் விட்டுக்கொடுக்க மாட்டேன். என தனது பக்க நியாயத்தை கூறினார்.பார்முலா ஒன்று என்றால் அதிவேகம் தான். அதில் ஆபத்தை எல்லாம் பார்த்து கொண்டிருக்க முடியாது. அண்ணனாக இருந்தாலும் தம்பியாக இருந்தாலும்வெற்றி தானே முக்கியம் என்கின்றனர் நிபுணர்கள்.

**கிரிக்கெட்** உலகில் பலவேறு சாதனைகளுக்கு சொந்தக்காரராக விளங்கும் சச்சினுக்கு இப்போது சோதனைக்காலம். 2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத்தை இந்திய அணிக்கு பெற்றுத்தருவார் என ஏங்கும் அவரது ரசிகர்களுக்கு மன உளைச்சலைக்கொடுக்கும் காலம்.




சச்சினின் கிரிக்கெட் வாழ்க்கை இந்த ஆண்டுடன் முடிவுக்கு வந்துவிடும் என திடுக்கிடும் ஜோதிட கணிப்பு வெளியாகியுள்ளதே இந்த ஏக்கம்.

ரசிகர்களுக்கு சோகமான இச்செய்தியை கூறியுள்ளது யார் தெரியுமா? பாகிஸ்தானின் பிரபல ஜோதிடர் சகாத் சவுத்ரி. இவர் சொன்னதெல்லாம் நடந்திருக்கிறதாம்.

ஜோதிடத்தை நம்பாதவர்கள் கூட அவர் சொல்லி பலித்ததை கேட்டால் நம்பி விடுவார்கள். அந்தளவிற்கு வல்லமை படைத்தவராம். அவர் கூறி நடந்த சம்பவங்களில் சில...

1980 இல் பாகிஸ்தான் முன்னணி பந்து வீச்சாளர் இம்ரான்கானுக்கு முழங்கால் எலும்பு காயம் ஏற்படும் . 2005இல் பாப்பரசர்உடல் நலமின்றி காலமாவார். 2004இல்

# வெல்லப்போவது ஜோதிடமா? உறுதியா?



தெற்காசியாவில் பூகம்பம் ஏற்பட்டு மிகப்பெரிய அளவில் அழிவு ஏற்படும். மூன்றாவது முறையாக இங்கிலாந்து தேர்தலில் பிளேயர் வெற்றி பெறுவார் இப்படி அவர் கூறியது எல்லாமே நடந்திருக்கிறது.

இப்போது சச்சின் ஓய்வு பெறுவார் என்றுள்ளார். சச்சினுக்கு நேரம் சரியில்லை. அவரது பிறந்த திகதியை வைத்து பார்க்கும் போது கிரகங்கள் சாதகமான திசையில் இல்லை. ஜோதிட சாஸ்திரப்படி காயம் காரணமாக 2005 இல் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று விடுவார். அவரது தீவிர ரசிகன் என்ற முறையில் நான் கூறுவது தவறாக இருக்க வேண்டும் என நினைக்கிறேன். ஆனால் மனிதனால் கிரகங்களை மாற்றியமைக்க முடியாதே நடப்பதே நடக்கும் என்கிறார் விரக்தியுடன்.

இவர் சொல்வதை நிரூபிப்பது போன்று சச்சினும் கடந்த ஓராண்டு காலமாக இடது முழங்கை ('டென்னிஸ் எல்போ) காயம்காரணமாக அவதிப்பட்டு வருகிறார். இதனால் பல்வேறு போட்டிகளை இழந்த இவர் சமீபத்தில் பங்கேற்ற தொடர்களிலும் பிரகாசிக்கத் தவறினார்.தற்போது, மீண்டும் சத்திர சிகிச்சைக்கு உள்ளாகி நான்கு மாதங்கள் ஓய்வில் இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது சச்சின் 2005இல் ஓய்வு பெறுவாரோ என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

இவற்றுக்கு அப்பால் எவ்வளவு தான் சாதனைகள் படைத்திருந்தாலும் உலகக் கோப்பையை அணிக்கு பெற்றுத்தரத் தவறியுள்ளேன். 2007ஆம் ஆண்டு அணியை சம்பியன் ஆக்குவதே இலட்சியம். அதன் பின்னரே ஓய்வு என்கிறார்உறுதியுடன் சச்சின். அப்படியென்றால் வெல்லப்போவது ஜோதிடமா சச்சினின் உறுதியா பொறுத்திருந்து பார்ப்போம்.

**மேற்கிந்தியத்தீவுகள்** கிரிக்கெட் அணி உலகில் எப்போதும் உயர்ந்த இடத்தையே பிடித்து வந்தது. ஒரு முறை தனது திறனை வேகப்பந்து வீச்சாலும் இன்னொரு தடவை துடுப்பாட்டத்தினாலும் வெளிப்படுத்தி வந்தது.

சிறிது சிறிதாக அந்தத் திறமையில் வீழ்ச்சி ஏற்பட்டு வந்தால் அதனை மீளக் கட்டியமைக்க வீரர்கள் பெரிதும் முயன்று வருகின்றனர். ஆயினும் பெரும் பலன் கிட்டவில்லை. மேற்கிந்தியத்தீவுகள் அணி தென்னாபிரிக்காவுடான தொடர்களில் படுதோல்வியடைந்தமை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். தென்னாபிரிக்காவுடனான தொடரில் ஒரு போட்டியிலாவது வெல்ல வேண்டுமென அவர்கள் கடுமையாக உழைத்தும் அது பலனற்றுப்போனது.





எனவே அந்த சோர்வில் இருந்து விடுபட முன்னர் அடுத்த ஒரு பலமான அணியான பாகிஸ்தான் அணியுடனான இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஒன்றை வென்று தனது சோர்வுக்குசிறு ஆறுதல் தேடிக் கொண்டது. அத்துடன் இரண்டாவது போட்டியிலும் பாகிஸ்தான் அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தி வருகின்றது. சில வேளை இந்தத் தொடரை இரண்டுக்கு பூச்சியம் என்ற கணக்கில் வெல்லவும் கூடும்



இந்தப் பலமான அணியுடன் மோதும் மேற்கிந்தியத்தீவுகள் அணி அடுத்ததாக சிறிலங்காவுடன் மோதவிருக்கிறது. தனது தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டே மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கு வருகை தருகின்றது. டெஸ்ட் துடுப்பாட்டத்தில் சதுர்ச்சதம் (400) முச்சதம் (300) இரட்டைச்சதம் (200) என வரிசையாக சாதனை படைத்து வரும் பிரைன் லாறா முன்னேறி வருவதில் சந்தேகமில்லை.

அதேபோன்று அணியின் ஏனைய வீரர்களான சந்தர்போல், சர்வான் ஆகியோரும் சதம் பெறுவோர் வரிசையில் இணைந்து கொண்டுள்ளனர்.

எவ்வாறேனும் சிறிலங்காவுடனான தொடரில் அவர்களுக்கு சவலாக இருக்கும் சுழல் பந்து வீச்சுக்கு முகம் கொடுப்பார்களா என்பது சந்தேகமே. உண்மையில் 12 வருடகாலமாக நடைபெறும் இரு நாட்டுப்போட்டிகளிலும் சுழல் பந்து வீச்சு அவர்களுக்கு சவாலாகவே இருந்து வருகின்றது

அத்துடன் இந்தத் தொடரில் முத்தையா முரளிதரன் இணைந்துள்ளமை அவர்களுக்கு பெரிதும் சவாலாகவே இருக்கும் 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற இரு நாடுகளும் பங்குபற்றிய முதலாவது டெஸ்ட் போட்டியில் பிரைன் லாறாவின் விக்கெட்டை தனது முதலாவது டெஸ்ட் விக்கெட்டாக முரளி பெற்றார். அப்போது லாறா பெற்ற ஓட்ட எண்ணிக்கை 18 மட்டுமே. அந்த இனிங்சில் முரளிதரன் 47 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அதுபோல 1997ஆண்டு நடை பெற்ற தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் ஒன்றுக்கு பூச்சியம் என்று வெற்றிபெற்றாலும் முரளியின் பந்து வீச்சு சிறப்பாக அமைந்தது. அவர் 34 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்த வகையில் முரளியின் பந்து வீச்சு சிறப்பிடத்தைப் பிடிக்கின்ற போதிலும் இதே போன்றதொருபந்து வீச்சாளரான பாகிஸ்தான் அணியின் தினேஸ் கனேரியா, நவிட் உல் ஹசன் றானர் போன்றோரின் பந்து வீச்சையும் முறியடித்து லாறா, கெய்ல்ஸ், சந்தர்போல், சர்வான் ஆகியோர் சிறப்பாக துடுப்பாடி வருகின்றனர். அதே துடுப்பாட்டம் முரளிதரனிடம் செல்லுபடியாகுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். மேற்கிந்தியத்தீவுகளுக்கு இது சாத்தியமாகுமாயின் தென்னாபிரிக்காவுடனான போட்டியில் ஏற்பட்ட தலை குனிவு சரியாக்கப்பட்டு விடலாம்.

— வடிவேல் —

-பொதுக்கட்டமைப்பில் சனாதிபதி கையொப்பமிட்டால்-

# மாகாணசபைகளில் வழங்கும் ஆதரவை விலக்கிக்கொள்ள ஜே.வி.பி முடிவு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் சனாதிபதி கையொப்பமிடுவாரேயானால் தாம் மாகாண சபைகளில் அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவிலிருந்து விலகிக்கொள்ளப் போவதாக ஜே.வி.பி நேற்று முன் தினம் அறிவித்துள்ளது.

ஜே.வி.பி யின் அரசியல் பீடம் கொழும்பில் கூடியபோது அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் கருத்திற்கமைய இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மத்திய நிறைவேற்றுக்குழுவிற்கு இம்முடிவு தெரியப்படுத்தப்படவுள்ள போதும், இது மத்தியகுழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணம் தவிர ஏனைய மாகாணங்களில் தற்போது ஆட்சியமைத்திருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜே.வி.பி மாகாணசபைகளில் தமது ஆதரவை விலக்கிக்கொள்ளுமாக விருந்தால் மாகாணசபை ஆட்சி கேள்விக்குறியாகுமெனக் கூறப்படுகிறது..

இதனிடையே ஏற்கனவே பொதுக் கட்டமைப்பில் சனாதிபதி கைச்சாத்திட்டால் தாம் அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்ளப் போவதாக ஏற்கனவே ஜே.வி.பி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு தொடர்பாக இரு நாட்களுக்குள் சனாதிபதி பொது மக்களுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் இல்லையேல் புதன்கிழமை தொடக்கம் தாம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும், தேசிய பிக்குமார் முன்னணி அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் பிக்குமார் முன்னணி வெளியிட்ட அறிவிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)



அம்பாறை கல்முனையில் தகர்க்கப்பட்ட புத்தர் சிலைக்கு பதிலாக கடந்த சனிக்கிழமை பௌத்த பிக்குகளால் புதிய சிலை நிறுவப்பட்டுள்ளதைப் படத்தில் காண்க. அப்பகுதியில் உள்ள சிங்கள மக்கள் சகிதம் வந்த பிக்குகள் பாடசாலை வளவினுள் அதனை மீண்டும் நாட்டியுள்ளனர்.

# நிறைவேற்று சனாதிபதியின் அதிகாரக் குறைப்பு; சந்திரிகா - சட்டவல்லுநர்கள் ஆராய்வு!

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பது தொடர்பாக சனாதிபதி சந்திரிகா ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சட்ட வல்லுநர்களை அழைத்து சனாதிபதி ஆலோசனை நடத்தியுள்ளார்.

தான் சனாதிபதியாக பதவியிலுள்ள வேளையிலேயே சனாதிபதிக்கான அதிகாரங்களைக் குறைப்பது தொடர்பான அரசியலமைப்பு மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு சனாதிபதி விரும்புவதாகவும், தனது பதவிக் காலம் முடியும்வரை அதிகாரங்களை தன் வசம் வைத்திருக்க சனாதிபதி திட்ட மிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அடுத்த முறை சனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என்பதால் சனாதிபதி இந்த நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (32)

# எரிபொருட்களின் விலை திங்கள் முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

திங்கள் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகள் சிறிலங்கா அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி 90 ரக ஒக்ரேன் பெற்றோல் ஒரு லீற்றர் ஆறு ரூபாவால் அதிகரித்து 80 ரூபாவிற்கு விற்கப்படவுள்ளது.

95 ரக ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 7.' ரூபாவில் இருந்து 83 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. லங்கா ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை நாலு ரூபாவால் அதிகரித்து 50 ரூபாவிற்கு விற்கப்படவுள்ளது.

சுப்பர் டீசலின் புதிய விலை 55 ரூபா 30 சதம், மண்ணெண்ணையின் விலை 28 ரூபா 50 சதத்திலிருந்து 30 ரூபா 50 சதமாக விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. கனிய எண்ணெய்களின் விலை வழமையான விலையிலிருந்து இரண்டு ரூபாவால் அதிகரித்துள்ளது. இதனடிப்படையில் பெற்றோலின் விலை ஆறு ரூபாவாலும், டீசலின் விலை நான்கு ரூபாவாலும், மண்ணெண்ணெயின் விலை இரண்டு ரூபாவாலும், ஏனைய கனிய எண்ணெய்களின் விலை இரண்டு ரூபாவாலும், அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. உலக சந்தையில் மசகு எண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பிற்கேற்பவே இவ் விலையதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாக அக் கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது. (32)

# முப்படைத்தளபதி தயாசந்தகிரி இந்தியா பயணமானர்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படை தளபதியும் முப்படைகளின் கட்டளைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நேற்று முன்தினம் இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

ஒருவார காலம் இந்தியாவில் தங்கியிருக்கும் தயாசந்தகிரி விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் தோன்றியுள்ள அச்சுறுத்தல் குறித்து இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கா இந்தியக் கடற்படைகள் கூட்டாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்தும், ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தியக் கடற்படை தளபதி சுசில் குமாரின் விசேட அழைப்பின் பேரிலேயே தயா சந்தகிரி இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (32)

# சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரிடம் கொழும்பின் பாதுகாப்பை ஒப்படைக்க முடிவு

(கொழும்பு)

கொழும்பில் ஏற்பட்டுள்ள கொலை, குற்றங்கள் ஏனைய பயங்கரவாத செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு விசேட அதிரடிப்படையினரிடம் கொழும்பு மாநகரின் பாதுகாப்பை ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பர்னாந்து தெரிவித்துள்ளார்.

தற்பொழுது களுத்துறை விசேட பயிற்சி நிலையத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் விசேட அதிரடிப் படையினர் இதற்கு ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

விசேடமாக கொழும்பின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு உந்துருளி பாதுகாப்பு பிரிவொன்றும் அமைக்கப்படவுள்ளது. இதற்காக கொழும்பின் 19 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதென பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதி சந்திரிகா விரைவில் எதிர்க்கட்சித் தலைவராவார்

## -விமல் வீரவன்ச கணிப்பு

சிறிலங்காவின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் நிறுத்திவிட்டு பாராளுமன்றத்திற்கு மீண்டும் சனாதிபதி சந்திரிகா திரும்புவார் என்று ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் அவர் பேசியதாவது:-

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பில் தாம் கையெழுத்திட்டால் அரசு கவிழும் என்பது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நன்றாகவே தெரியும். இதனால் எதிர் வரும் சனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட்டால் ஏற்படும் விளைவுகளையும் அவர் அறிவார்.

இந்தச் சூழலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைக்க அவர் திட்டமிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் கண்டிப்பாகத் தோல்வியடைவார். அவர் தோல்வியடைவதற்கான சூழல்களை சந்திரிகா குமாரதுங்க உருவாக்கி வைத்துள்ளார்.

சனாதிபதித் தேர்தலையடுத்து நடைபெற இருக்கும் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறும். அந்தத் தேர்தலில் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக சனாதிபதி சந்திரிகா மீண்டும் பாராளுமன்றத்திற்கே திரும்புவார். அப்போது அதிகாரம் ஏதுமற்றவராக மகிந்த ராஜபக்ஷ இருப்பார் என்றார் அவர்.

# மக்கள் குறித்துப் பேசுவதற்கு ஜே.வி.பி.க்கு அருகதையில்லை

(கொழும்பு)

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தெரியாத ஜே.வி.பி. தொடர்ந்து அரசில் இருப்பதில், என்ன பலனிருக்கின்றது எனவும் அவர்களுக்கு மக்கள் குறித்து பேசுவதற்கு எந்தவித அருகதையும் இல்லை எனவும் புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நியோமல் பெரேரா கூறினார்.

புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் பிரதம அமைப்பாளராக, கட்சியினால் நியமிக்கப்பட்டதை அடுத்து நேற்று முன்தினம், புத்தளம் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார்.

இந்த வருடத்தில் இரு தேர்தல்கள் நடததப்பட வேண்டும், உள்ளூராட்சி தேர்தல் மற்றது சனாதிபதித் தேர்தல், இந்த தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றி உறுதியானது என்றும் அவர் கூறினார்.

### ஆளும் கூட்டணிக்குள் மகிந்த ஆரம்பார்ப்பு!

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக ஆளும் கூட்டணியில் இடம் பெற்றிருக்கும் கட்சிகளின் கருத்தை அறிந்து கொள்வதற்கான முயற்சியில் சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஈடுபட விருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் சிலர் விடுத்த வேண்டுகோளிற்கு அமையவே கட்சித் தலைவர்களைச் சந்திக்க அவர் தீமானித்திருப்பதாக தெரியவருகின்றது.


# கணினி ஆசிரியப் பணிநிலைக்கான வேண்டுகை

ஆண், பெண் இருபாலரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்:**
* க.பொ.த சாதாரண தரத்தில் தேர்ச்சியடைந்திருப்பதுடன் M.S office கற்கை நெறியில் (Word, EXLCL, ACCESS) தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.
* M.S office கற்கை நெறியில் குறைந்தது இரண்டு வருட ஆசிரியப் பட்டறிவு இருத்தல் வேண்டும்.

02. **அகவை:** 25 தொடக்கம் 35 வரை

03. **நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்:** 13.06.2005 காலை 9.00மணி

04. **நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:** மனிதவள மேம்பாட்டு பகுதி, நிதித்துறை, நாகதம்பிரான் வீதி, கிளிநொச்சி.

05. நேர்முகத்தேர்விற்கு வருகை தருவோர் கணினி ஆசிரியப் பணிநிலைக்கான சுய விரிப்புகள் அடங்கிய வேண்டுகையையும், தங்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றின் படிகளுடன் வருகை தர வேண்டும்.

06. **சம்பளம்:** நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

*ஆளுகை மனிதவள மேம்பாட்டுப்பகுதி,*
*நிதித்துறை.*

(சி.12185)

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு
வடக்கு-கிழக்கு மாகாண சபை

## வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி விஸ்தரிப்பு திட்டம்

(நிகோட் -விஸ்தரிப்பு)

நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆஅவ கடன் இல:- 2084 சிறீ (எஸ்எவ்)

# குடிசார் வேலையைப் பெறுதல்

# கேள்வி அறிவித்தல் - இல.42

1. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் (NECORD - Ext) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ( "ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னால் தொழில்தருனராக குறிப்பிடப்படும் (NECORD) திட்டக் கேள்விச்சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக் காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| ஒப்பந்த இனங்காட்டல் இல: | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| KN/ NECORD- Ext/Ed/01 | கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீட மீள் ஒழுங்கமைப்பு- கட்டம் –1 | M3 கட்டடங்கள் | 734,000/= |
| VA/ NECORD- Ext/Id/01 | வவுனியா கலாச்சார மண்டபம் புனரமைப்பு | M4 கட்டடங்கள் | 331,750/= |

3. **பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.**

   I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

   II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTAD டுடன் M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

   III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுபத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

   IV. ICTAD' வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

   V. ஒப்பந்தக்காரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

   VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம்.
   **(தொலைபேசி: 026-2227434. ஃபக்ஸ் :026-2227401. இணையதள முகவரி: www.necord.org ஈமெயில்: necord@sltnet.lk )**

6. **கேள்வி ஆவணங்களை 10.06.2005 இலிருந்து 27.06.2005 வரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 5,000/- ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.**


7. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை, 'நிகோட்', 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்று விலாசமிடப்பட்டு, 01.07.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

8. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 27.06.2005 ஆந் திகதி அன்று காலை 11.30 க்கு நடைபெறும்.
9. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 7 இல் குறிப்பிட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**த.லங்காநேசன்**
தலைவர், கேள்விச் சபை,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும்
அபிவிருத்தி திட்டம்,
55, கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

(சி-12038)

# இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி; 193 ஓட்டங்கள் முன்னிலையில் பாகிஸ்தான்



பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் ஆட்டமிழக்காது பெற்ற 64 ஓட்டங்களுடன் மேற்கிந்திய தீவுகளுடனான இரண்டாவது டெஸ்ட்போட்டியில் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் ஆட்ட நேரமுடிவில் பாகிஸ்தான் தனது இரண்டாவது இனிங்சில் நான்கு விக்கெட் இழப்புக்கு 223 ஓட்டங்களைப் பெற்று 193 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ளது. அவ்வணியின் ஆரம்பத்துடுப்பாட்டவீரர் சொகைப் மாலிக் 64 ஓட்டங்களுடனும், யசிர் ஹமிட் 26 ஓட்டங்களுடனும், அசிம்கமல் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், யுனிஸ்கான் 43 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மேற்கிந்திய தீவுகளின் பந்து வீச்சுசார்பில் கொரிகொரி மோர் மூன்று விக்கெட்டுக்களையும் கிறிஸ் கெய்ல் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.



முன்னதாக 275 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்கள் என்ற தனது முதல் இனிங்சை தொடர்ந்த மேற்கிந்தியதீவுகள் அணி மேலும் 129 ஓட்டங்களைப் பெற்று எஞ்சிய ஆறு விக்கெட்டக்களையும் இழந்தது பிரையன் லாரா 153 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பாகிஸ்தான் சார்பில் இப்போட்டியில் சபிர் அகமட் நான்கு விக்கெட்டுக்களையும், சயிட்அப்ரிடி மூன்று விக்கட்டுக்களையும், ரசாக் இரண்டு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

# டெண்டுல்கர் நாடு திரும்பினார்




இந்திய கிரிக்கெட் அணி நட்சத்திரவீரர் சச்சின் டெண்டுல்கர் இடது முழங்கையில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டு வந்தார். அவருக்கு லண்டனில் உள்ள வைத்திய சாலையில் சத்திர சிகிச்சை நடந்தது.

சிகிச்சை முடிந்து நேற்றுக்காலை அவர் மும்பை திரும்பினார். விமான நிலையத்தில் அவரை நிருபர்கள் சந்தித்து பேட்டி கண்டனர். அப்போது அவர் கூறியதாவது;

எனக்கு சிகிச்சை முடிந்த பின் வேகமாக குணமடைந்து வருகிறேன். இருந்தாலும் 16 வாரங்கள் வரை (நான்கு மாதங்கள்) நான் போட்டி விளையாட்டுக்களில் பங்கேற்காமல் ஓய்வெடுக்க வேண்டியுள்ளது. நான் எப்படி,எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று வைத்தியர்கள் சில ஆலோசனைகளைக் கூறியுள்ளனர். அதன்படி நடந்து வருகிறேன்.

சிறிதுகாலம் ஓய்வுக்குப் பின் நான் மீண்டும் லண்டன் சென்று வைத்தியர்களிடம் காண்பிக்கவேண்டும் அவர்கள் பரிசோதித்து விட்டு என்ன சொல்கிறார்களோ அதன்படி நடப்பேன் என்றார்.

# பிரெஞ் ஓபன் டென்னிஸ் பட்டம் வென்றார் ரபெல் நடால்



பிரெஞ்ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடால், மரியானோவைத் தோற்கடித்து 'சம்பியன்'பட்டம் வென்றார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ஓபன் டென்னிஸ் போட்டி பரிசில் நடந்தது.

இதன் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் நான்காம் நிலை வீரர் ரபெல் நடால் (ஸ்பெயின்), அர்ஜென்டினா வீரர் மரியானோ புர்டாவை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் 19 வயதான ரபெல்நடால் 6-7(6-8),6-3,6-1,7-5 என்ற செட் கணக்கில் மரியானோவை வீழ்த்தி முதல் முறையாக 'சம்பியன்'பட்டம் வென்றார்.

நடால் தனது முதல் பிரெஞ் ஓபன் போட்டியிலேயே சம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார். இதற்கு முன்பு 1982 ஆம் ஆண்டில் சுவீடன் வீரர் மாட்ஸ் விலான் டெர் இதேபோல் வெற்றி பெற்றுள்ளார். நடால் அரையிறுதியில் முதல்நிலை வீரர். ரோஜர் பெடரரை (சுவிட்சர்லாந்து) வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார் என்பது குறிப்பிடத் தக்கது. கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ஆறாவது இளம்வீரர் என்ற பெருமையையும் நடால் பெற்றார்.

பெண்கள் இரட்டையர் இறுதிப் போட்டியில் விர்ஜினாருனோ (ஸ்பெயின்) பாலா சுரெஸ் (அர்ஜெண்டினா) ஜோடி,காரா பிளாக் (சிம்பாப்வே)- லிசெல் கிதுபெர் (தென்னாபிரிக்கா) ஜோடியுடன் மோதியது.

இதில் முதல்நிலை ஜோடியான விர்ஜினா-பாலா சுரெஸ்4-6,6-3,6-3 என்ற செட் கணக்கில் இரண்டாம் நிலை ஜோடி காரா பிளாக்-லிசெல் கிதுபரை வீழ்த்தி 'சம்பியன்பட்டம் வென்றது.

தொடர்ந்து ஆறாவது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறிய விர்ஜினாருனோ-பாலா சுரெஸ் ஜோடி நாலாவது முறையாக பிரெஞ்சு ஓபன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது. இருவரும் இணைந்து 13 கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டியில் ஆடியுள்ளனர். அதில் எட்டாவது வெற்றி இதுவாகும்.




பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட்போட்டியை 2-0 என்ற நிலையில் கைப்பற்றிய இங்கிலாந்து அணி வெற்றிக்கிண்ணத்துடன்.

## கவுண்டி போட்டி மொங்கியா அபாரம்

இங்கிலாந்தின் கவுண்டிகிளப் கிரிக்கெட் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் லைஜெஸ்டர்சயர் அணி சார்பில் இந்திய வீரர் தினேஷ் மொரங்கியா விளையாடினார்.

சோமர்செட் அணியை எதிர்த்து ஆடிய அவர் அதிரடியாக ஆடி 86 பந்தில் 75 ஓட்டங்கள் குவித்தார். இதில் ஏழு பவுண்டரி, ஒரு சிக்சர் அடங்கும். அது மட்டும் அல்லாமல் இவர் 12 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து நான்கு விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்.இதனால் மொங்கியா அணி 217 ஓட்டங்கள் எடுத்து எதிர் அணியை 71 ஓட்டவித்தியாசத்தில் வென்றது.




# 2011 உலகக் கோப்பையை இந்தியாவுடன் இணைந்து நடாத்த பாகிஸ்தான் விருப்பம்



2011 இல் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரை இந்தியாவுடன் சேர்ந்து நடத்த பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது.

மேற்கிந்தியத் தீவில் வரும் 2007 இல் உலகக் கோப்பை தொடர் நடக்கிறது. இதன் பின் 2011 இல் நடக்கும் இத்தொடரை நடத்த இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

மத்திய அரசு சர்வதேச போட்டிகளுக்கு விவிலக்கு அளித்துள்ளதால் போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாகக் கிரிக்கெட்சபைத்தலைவர் ரவீந்திரசிங் மகேந்திரா கூறியுள்ளார். இதற்கு முன் இரண்டு முறை இத்தொடர் இந்தியாவில் நடந்துள்ளது.

1987 இல் இந்தியா, பாகிஸ்தான் இணைந்து நடத்தின. பின்னர், 1996 இல் இந்தியா, பாகிஸ்தான்,இலங்கை சேர்ந்து நடத்தின. இதேபோல் இம்முறையும் பாகிஸ்தான் இந்தியாவுடன் இணைந்து போட்டியை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட்சபைத் தலைவர் ஷாரியார் கான் கூறுகையில், " ஆசிய நாடுகளில், உலகக் கோப்பைத் தொடரைத் தனித்து நடத்தும் தகுதி இந்தியாவுக்கு மட்டுமேயுள்ளது. சர்வதேச தரம் வாய்ந்த 27 மைதானங்கள் அங்குள்ளன. பாகிஸ்தான்,இலங்கை, வங்கதேசத்தில் ஐந்து அல்லது ஆறு மைதானங்கள் மட்டுமேயுள்ளன.

இதனால் மிகப்பெரிய இத் தொடரை எங்களால் தனித்து நடத்த இயலாது. ஆனாலும், கடந்த இரண்டு முறைபோல இந்தியாவுடன் இணைந்து நடத்தவிரும்புகிறோம். மற்றக் கண்டங்களைக் காட்டிலும் ஆசியாவில்தான் கிரிக்கெட்போட்டிகளுக்கு அதிக வரவேற்புள்ளது. அனுசரணையும் நிறையவுள்ளன.

இதனால் தொடரை நடத்தும் வாய்ப்புக் கட்டாயம் கிடைக்கும் என நம்புகிறோம். இம்மாதம் லண்டனில் நடக்கும் ஆசிய கிரிக்கெட்சபைக் கூட்டத்திற்குப் பின் இது பற்றி ஆலோசிக்க உள்ளோம்." என்றார். இந்தியாவைத்தவிர, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா நாடுகளும் உலகக் கோப்பைப் போட்டியை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளன.

# இங்கிலாந்து அணி மறுப்பு

கராச்சி டெஸ்ட் போட்டியில் விளையாட இங்கிலாந்து அணியும் மறுத்துவிட்டது. இது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முயற்சிக்குப் பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கராச்சியில் விளையாட பெரும்பாலான அணிகள் விரும்புவதில்லை. 2002 இல் நியூசிலாந்து அணி சென்றிருந்தபோது ஏற்பட்ட குண்டு வெடிப்புச்சம்பவம், கலவரம், தீவிரவாதிகள் அச்சுறுத்தலால் பதற்றம் நிறைந்த பகுதியாகக் காணப்படுகிறது. வங்கதேச (2003), இலங்கை (2004) தவிர அவுஸ்திரேலியா முதல் இந்தியா வரை இங்கு டெஸ்ட் போட்டியில் விளையாட மறுத்துவிட்டன.

இந்தச் சூழலில் கராச்சியை மீண்டும் சர்வதேச டெஸ்ட் அரங்கமாக மாற்ற பாகிஸ்தான் கிரிக்கெட்சபை முயற்சி மேற்கொண்டது. ஒக்டோபரில் பாகிஸ்தான் வரும் இங்கிலாந்து அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இத்தொடரின் போது ஒரு டெஸ்ட் போட்டியை கராச்சியில் நடத்த திட்டமிடப்பட்டது. உடனே லண்டன் சென்ற பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷாரியார்கான் இங்கிலாந்து கிரிக்கெட் சபைத்தலைவர் டேவிட் மோர்கனைச் சந்தித்துப் பேசினார். அப்போது, கராச்சி வேண்டாம் என்று. மோர்கன் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இது பற்றி ஷாரியார் கான் கூறுகையில்;

கராச்சியில் வீரர்களின் பாதுகாப்புக் குறித்து அச்சம் தெரிவிக்கவில்லை. ஆனாலும், டெஸ்ட் போட்டி என்றால் குறைந்தது ஒரு வாரம் தங்கியிருக்க வேண்டும். கராச்சியில் சூழ்நிலை அவ்வளவு நாட்கள் தங்குவதற்கு உகந்ததாக இருக்காது என்று மோர்கன் தெரிவித்தார்.

## முன்பள்ளி விளையாட்டுப்போட்டி


வட்டக்கச்சிப் பிரதேசத்தில் இரு முன்பள்ளிகள் கடந்த சனியன்று விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றது. வட்டக்கச்சி புனித சூசையப்பர் முன்பள்ளி,மாயவனூர் சசி முன்பள்ளி ஆகியவற்றில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வுகள் தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகியது.

இப்போட்டியில் சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகளாக நீர் நிரப்புதல், தாராநடை,யானை ஓட்டம்,பலூன்உடைத்தல், தொலைந்த பசுவைத்தேடுதல், தனிஓட்டம் போன்ற பல விளையாட்டுக்கள் நடைபெற்றன. இத்துடன் வெற்றி பெற்ற சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டு நன்றி உரையுடன் நிகழ்வுகள் யாவும் நிறைவு பெற்றன. (!2)




யுஜின் நகரில் நடந்த பிரிபோன்டைன் தடகள போட்டியில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பிரிவில் அமெரிக்காவின் ஜஸ்டின் காட்லின் (இடது) முதலிடம் பெற்றார். போட்டித்தூரத்தை இவர் 9.84 வினாடிகளில் கடந்தார்.

**சிந்தனைக்கு**



அறப்போரிலும் சரி ஆயுதப்போரிலும் சரி, எமது விடுதலைப்போர் உலக சாதனைகளைப் படைத்து வருகின்றது; மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 07-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## புரட்சியா? சதிப்புரட்சியா?

ஆட்சி அதிகாரமா? அன்றி நாட்டின் நலனா? என்பது குறித்து தீர்மானிக்க வேண்டியதொரு கட்டத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளார். இவ்விடயத்தில் நாட்டின் நலன் என்பது அரசாங்கத்திற்கு இரண்டாம் பட்சமானது என்பது ஏற்கனவே அறியப்பட்டதொன்றாகும்.ஆயினும் தற்போதைய சர்வதேச நிலைமைகள் மற்றும் உள்ளூர் நிலைமைகள் அரசாங்கத்திற்குச் சாதகமானதாக இல்லை.

அமெரிக்கா உள்ளிட்ட சிறிலங்கா அரசிற்கு நிதியுதவி வழங்கும் பெரும்பாலான நாடுகள்/ அமைப்புக்கள் பொதுக்கட்டமைப்பின் அவசியத்தை விளங்கிக் கொண்டும், புரிந்து கொண்டும் உள்ளன. அது மட்டுமன்றி பொதுக்கட்டமைப்பு ஒன்றின் உருவாக்கத்துடன் சிறிலங்காவிற்கு வழங்குவதாக உறுதியளித்த நிதியையும் தொடர்புபடுத்தியுள்ளன. அதாவது, பொதுக்கட்டமைப்பு உருவாகும் பட்சத்திலேயே முழு அளவிலான நிதியுதவி வழங்கப்படும் என அவை வலியுறுத்தியுள்ளன.

இந்நிலையில், பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுதலுடன் சிறிலங்காவின் பொருளாதாரம் நேரடியாக தொடர்புபட்டதாகியுள்ளது. மேலும் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான மீள் கட்டுமானப் பணிக்கானதாக இந்நிதியுதவி இருப்பினும், சமாதான முயற்சிகளுக்கு உந்து துணையாக இருக்கும் என்றே உதவி வழங்குவோர் வலியுறுத்துகின்றனர்.

அத்தோடு, சனாதிபதி சந்திரிகா இப்பொதுக்கட்டமைப்பு விடயத்தை எதிர்கொள்ளும்போது அதனை நிராகரிக்கும் திராணி அற்றவராக உள்ளார். ஏனெனில், தர்க்க ரீதியிலும், நடைமுறைச் சாத்தியப்பாட்டிலும் பொதுக்கட்டமைப்பு நியாயப்பாட்டைக் கொண்டதாகவே உள்ளது.

ஆனால், பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான சக்திகள் சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளைவிடவும் வேகமாகவும், விரைவாகவும், தமது செயற்பாட்டை மேற்கொள்பவையாக உள்ளன. இதனால், பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவான சூழ்நிலை வளர்ச்சி காண்பதற்குப் பதில் எதிரான சூழ்நிலை விரைந்து வளர்ச்சி கண்டு வருகின்றது.

எடுத்துக்காட்டாக, ஜே.வி.பி. பொதுக்கட்டமைப்புக் குறித்து உறுதியான தீர்மானத்திற்கு வந்துள்ளது போன்று தனது அபிப்பிராயத்தை [illegible]படுத்தி வருகின்றது. குறிப்பாக, பொதுக்கட்டமைப்பு[illegible] சனாதிபதி கையொப்பம் இடுவாரேயானால், அர[illegible]த்தில் இருந்து வெளியேறுவோம் எனத் தெரிவித்த ஜே.வி.பி. [illegible]பொழுது மாகாண சபையிலும் பொ.ஐ.முன்னணிக்கு வழங்கும் ஆதரவையும் விலக்குவதாகத் தெரிவிக்கின்றது.

இது ஒருபுறம் இருக்க, பொதுக்கட்டமைப்பில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கையொப்பம் இடுவரேயானால், நாட்டில் புரட்சிகரமான, மாற்றங்கள் நிகழும் என ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச எச்சரித்துள்ளமை ஜே.வி.பி. சில நகர்வுகளை மேற்கொள்ளத் தீர்மானத்துள்ளதையே வெளிப்படுத்துவதாயுள்ளது.

ஆனால், ஒன்று விமல் வீரவன்ச கூறுவது போன்று புரட்சிகர மாற்றம் ஒன்றும் ஏற்பட வாய்ப்பில்லை / முடியாது. ஏனெனில், புரட்சிகர மாற்றங்கள் எதையும் செய்யும் தகுதியை ஜே.வி.பி. என்றோ இழந்துவிட்டது. சிலவேளை சதிப்புரட்சி ஒன்றை ஜே.வி.பி. மேற்கொள்ள முற்படுதல் கூடும்.

அதுமட்டுமன்றி அரசாங்கத்தை வெளியில் இருந்து ஆதரிக்கும் ஜாதிக ஹெல உறுமய பொதுக்கட்டமைப்பைத் தீவிரமாக எதிர்த்து வருகின்றது. சனாதிபதி சந்திரிகா சுய அரசியல் இலாபம் தேடும் நோக்கில் செயற்படுவதாகக் குற்றம் சாட்டுவதோடு, உயிரைக் கொடுத்தாலும் பொதுக்கட்டமைப்பு உருவாவதைத் தடுத்தே தீருவது என சூளுரைத்து வருகின்றது.

இவை மட்டுமன்றி ஆளும் கூட்டணியின் பிரதான கட்சியும், சனாதிபதி சந்திரிகா தலைமை தாங்கும் கட்சியுமான சுதந்திரக் கட்சியில்கூடப் பொதுக்கட்டமைப்பிற்கு முழு அளவிலான ஆதரவென்பதுமில்லை. அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் ஓர் அணியொன்று பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக செயற்படத் தொடங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்புக் குறித்து எடுக்கும் தீர்மானத்தால் அரசாங்கம் கவிழும் நிலை உருவாகுமா? அன்றி நாட்டை மிகவும் மோசமானதொரு நிலைக்கு இட்டுச் செல்லுமா என்பதே இன்றுள்ள கேள்வியாகும். சனாதிபதி சந்திரிகா எத்தகைய சவால் வந்தாலும் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன் என வலியுறுத்திக் கூறி வந்தாலும், அதற்காக ஆட்சி அதிகாரத்தைப் பணயம் வைத்து பொதுக்கட்டமைப்பை உருவாக்குவார் என எதிர்பார்ப்பதற்கில்லை. அவ்வாறு அவர் மேற்கொள்வாரேயானால் அது சிறிலங்கா அரசியல் வரலாற்றில் ஒரு புரட்சிகரமான நடவடிக்கையாகவே இருக்கும். ஆனால், அது நடக்குமா? இவ்வாறு நம்புவதற்கான ஆதாரம் இல்லை. ஏனெனில், நாட்டின் நலன் என்ற ரீதியில் சிங்கள ஆட்சியாளர்கள் என்றுமே தீர்மானம் எடுத்ததில்லை.

# எரிபொருள் விலையேற்றத்தின் எதிரொலி
# சிற்றூர்தி கட்டணங்களை உயர்த்த முடிவு

நாட்டில் நேற்று முன்தினம் ஏற்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக தனியார் சிற்றூர்திக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

இல்லையேல் நாளை முதல் கட்டணங்களை சுயமாக அதிகரிகப் போவதாக தனியார் சிற்றூந்து உரிமையாளர் சங்கத்தலைவர் கெமுனு விஜயரட்ன எச்சரித்துள்ளார்.

குறைந்தபட்ச சிற்றூந்துக்கட்டணம் நாலு ரூபாவிலிருந்து ஐந்து ரூபாவாகவும் ஏனைய கட்டணங்கள் 15 வீதம் முதல் 17 வீதம் வரையிலும் அதிகரிக்கப்படவேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சிற்றூந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுன விஜயரட்ன கருத்துத் தெரிவிக்கையில்; திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்த எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக தமக்கு சேவைகளைக் கொண்டு செல்ல முடியாத நிலை ஒன்று ஏற்பட்டுள்ளதென தெரிவித்தார். தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் விலை அதிகரிப்பினை நடைமுறை பயணக்கட்டணங்களினால் எந்த வகையிலும் ஈடு செய்ய முடியாதுள்ளது.

ஏற்கனவே போக்குவரத்து சேவை ஆணைக்குழுவுடன் செய்துக் கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி சிற்றூந்து கட்டணங்களில் அதிகரிப்பு மேற்கொள்ளப்படவேண்டும்.

இந்த நிலையில் தற்சமயம் ஏற்படுத்தப்பட்டுள்ள எரிபொருட்களின் விலையுயர்வுகளை கருத்திற் கொண்டு கட்டண உயர்வுகளை தற்போதே அமுல் செய்ய வேண்டுமென கெமுனு விஜயரட்ன கேட்டுக் கொண்டார்.

# ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை நிராகரிப்பது பிரிவினையை வலிமையடையச் செய்யும்!

**— அரசியல்யாப்பு விவகார அமைச்சர் டி.யு.குணசேகர**

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மக்களுக்கு உதவி செய்யக் கூடிய ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை நிராகரித்தால் பிரிவினைவாதம் தான் வலிமையடையும் வரலாறு இதை நிரூபித்து இருக்கின்றது என அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு அரசியல் யாப்பில் திருத்தம் செய்யவோ, விசேட சட்டம் எதையும் கொண்டு வரவேண்டிய தேவையோ கிடையாது.

பொதுக்கட்டமைப்பு என்பது ஒரு நிர்வாக அலகு. அது அதிகாரிகள் அளவில் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. இதில் வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளும் இணைக் கப்பட்டுள்ளன. இந்த பொதுக் கட்டமைப்பு வரையறைக்குள்ளான ஒரு குறிப்பிட்ட காலம்வரை தான் செயற்படும். பாராளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துடன் கூட இந்தப் பொதுக்கட்டமைப்பை செயற்படுத்தலாம்.

அனைத்து சமூக மக்களும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்தும் சனாதிபதியின் முடிவை ஆதரிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போர் நிறுத்தம் அமுலில் உள்ளபோதே சமாதானத்தை முன்னெடுக்க வேண்டும்!

**— நிதியமைச்சர் சரத் அமுனுகம**

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் போதே சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரித்துள்ளார். தற்போது நாட்டில் ஏற்பட்டுவரும் அபிவிருத்திக்கு பிரதான காரணம் போர் நிறுத்தமே. போர் நிறுத்தம் காரணமாக நாட்டு மக்களின் வாழ்கை வழமைக்குத் திரும்பியுள்ளது. இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு குரல் கொடுப்பவர்கள் யுத்தம் ஒன்றிற்கு சென்றால் அதற்கான நிதியைத் திரட்டுவது, நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பதற்கான மாற்றுத்தீர்வை முன்வைக்க வேண்டுமென நிதியமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (32)

# நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்யும் வைத்தியர்கள் மீது கடும் நடவடிக்கை

**— வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன்**

(வவுனியா)

பொலிஸ் விசாரணைகள், சம்பந்தப்பட்ட திடீர் மரணங்கள் தொடர்பாக நீதிமன்றம் விடுக்கும் உத்தரவை வவுனியா பொது வைத்திய சாலையின் பதில் மருத்துவ அத்தியட்சகராகக் கடமையாற்றும் வைத்தியர்கள் உதாசீனம் செய்யும் நோக்கில் நடந்து கொள்வதாகவும், அவ்வாறு நடந்து கொள்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் எச்சரிக்கை செய்துள்ளார்.

கடந்த வாரம் தீவிபத்தொன்றில் மரணமாகிய ஒருவரின் மரணம் தொடர்பான விடயத்தில் வவுனியா மாவட்ட பதில் நீதவான் எம்.சிற்றம்பலம் மருத்துவ பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிககுமாறு உத்தரவிட்டார்.

ஆனால் அச்சமயம் பதில் மருத்துவ அத்தியட்சகராக கடமையாற்றிய வைத்தியர் ஒருவர் தனக்கு அனுபவம் போதாது என்றும், எனவே சம்பந்தப்பட்ட சடலத்தை அனுராதபுரத்திற்கு அனுப்பி மருத்துவ பரிசோதனை நடத்தி அறிக்கையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் எழுத்து மூலம் பொலிசாருக்கு அறிவித்துள்ளதாக பதில் நீதவானுக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்யும் வகையில் அந்த வைத்தியர் நடந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்து இந்த விடயம் தொடர்பாக முழுமையான அறிக்கையொன்றை நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்குமாறு நீதிபதி எம்.இளஞ்செழியன் பதில் நீதவான் எம்.சிற்றம்பலத்திற்கு உத்தரவிட்டுள்ளார். (21)

# திஸாநாயக்கவின் பா. உ பதவி நேற்று நள்ளிரவுடன் இரத்து

(கொழும்பு)

இரண்டு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவிக்கும் நுவரெலிய மாவட்ட ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி நேறறுடன் இரத்தாகின்றது.

அரசியல் யாப்பின் படி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குற்றச்செயலுக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு குறிக்கப்பட்ட தண்டனையானது ஆறு மாத காலமாக நடை முறையில் இருக்கும் போது அந்தப் பாராளுமன்ற உறுப் பினரின் பிரஜா உரிமை ஏழு வருடங்களுக்கு இல்லாமல் போகின்றது.

இதன்படி எஸ்.பி திஸாநாயக்கவுக்கு இக்காலப் பகுதிக்குள் சனாதிபதியால் மன்னிப்புக் கொடுக்கப் படாவிட்டால் ஏழு வருடங்களுக்கு அவரது பிரஜா உரிமை இரத்துச் செய்யப்படும்.

கடந்த பாராளுமன்ற தேர்தலுக்கமைய நுவரெலியா மாவட்டத்திற்கு ஐ.தே.கட்சி விருப்பு வாக்குப்பட்டியலில் அடுத்த படியாக இருப்பவர் முன்னாள் அமைச்சர் திருமதி. ரேணுகா கேரத் ஆவார்.நுவரெலிய மாவட்ட மக்களின் கருத்திற்கு மதிப்பளித்து எஸ்.பி திஸாநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி இரத்தாகும் வெற்றிடத்திற்கு கட்சித் தலைமைத்துவம் தன்னை நியமிக்குமென ரேணுகாகேரத் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# யாழ்.உயர்பாதுகாப்பு வலய பாதிப்பு குறித்து படை அதிகாரிகள்-மனித உரிமைக்குழு பேச்சு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இயல்புவாழ்க்கையினை தோற்றுவிப்பதில் பெருந்தடையாகவுள்ள அதியுயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும், அவ் அதியுயர்பாதுகாப்பு வலயத்தை அண்டியுள்ள, சூனியப்பிரதேசங்களில் மக்களை மீளக்குடியேற அனுமதிப்பது தொடர்பாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை - யாழ். மாவட்ட படைத்தலைமையுடன் நீண்ட பேச்சுக்களை நடாத்தியுள்ளது.

குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி ராதிகா குமாரசாமி மற்றும் அதன் ஆணையாளர்கள் ஐவர் அடங்கிய குழு நேற்று வருகைதந்திருந்தது.

அக்குழு யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தலைமையிலான யாழ்.மாவட்ட படைத்தலைமையுடன் உயர்பாதுகாப்பு வலயம், மீள் குடியமர்வு மற்றும் படைத்தரப்பினரின் வாகன விபத்துக்கள் மற்றும் அத்தனையடுத்து நிகழும் வன்செயல்கள் என்பவை தொடர்பாக விரிவான, நீண்டநேரப் பேச்சுக்களை நடாத்தியுள்ளது.

இதேவேளை, ஆணைக்குழுவின் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் வெகுசன அமைப்புக்களினதும் பிரதிநிதிகளையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் வைத்து சந்தித்துப்பேச்சுக்களை நடாத்தியுள்ளனர். இச்சந்திப்பின் போது குடாநாட்டில் இயல்புவாழ்க்கையை ஏற்படுத்துவதில் படைத்தரப்பின் தலையீடுகளே இடையூறுகளை விளைவித்துவருவதாக ஊடகவியலாளர்களிடையே பேசிய அரசசார்பற்ற அமைப்புக்களின் இணைய பிரதிநிதியொருவர் கருத்து வெளியிட்டார்.

இதனிடையே மேற்படி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்மட்டக் குழு நேற்று மாலை யாழ். ஆயர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளாரை யாழ். ஆயர் இல்லத்தில் சந்தித்துப்பேச்சு நடாத்தியது

குறிப்பாக அதியுயர்பாதுகாப்பு வலயப்பிரச்சினைகள் மீள் குடியமர்வு மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பாக சந்திப்பின் போது எடுத்துக்கூறியிருந்த ஆயர் படையினரது வாகன விபத்துக்களையடுத்து ஏற்பட்டுவருகின்ற வன்முறைகள் தொடர்பாகவும், மக்கள் வாழ்விடங்களில் அமைந்துள்ள முகாம்கள் மற்றும் காவலரண் பகுதிகளிலும் அத்துடன் கரையோரப்பகுதிகளிலும் படையினரால் போடப்படும் முட்கம்பி வேலிகளால் ஏற்பட்டுவரும் விபத்துச் சம்பவங்கள் தொடர்பாகவும் குறிப்பிட்டு சுட்டிக்காட்டியிருந்தார். (27)

# ஈ.பி.டி.பி துணை அமைப்பாளர் இல்லம் மீது கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.டி.பி தேசவிரோக் கும்பலின் துணை அமைப்பாளர் கந்தையா அருமைலிங்கத்தின் இல்லம் மீது இனந்தெரியா நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு-கல்முனை வீதி கல்லடியில் உள்ள இல்லத்தின் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட வேளை அவரது மனைவியும், பிள்ளைகளும் மட்டுமே வீட்டில் இருந்துள்ளனர்.

குறிப்பிட்ட தாக்குதலின் போது வீட்டிலிருந்த எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படாத போதிலும் வீட்டின் முன்பகுதி சிறு சேதமடைந்துள்ளது. வடகிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரான இவர், தற்போது பனை அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராக அங்கம் வகித்து வருகின்றார். கடந்த மாதம் 14 ஆம் திகதியும் இவரது வீட்டின் மீது இதே போன்று கைக்குண்டுத் தாக்குதலொன்று மேற்கொள்ளப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை புத்தர்சிலை விவகாரம்; சர்வமதக்குழு-தமிழ்மக்கள் பேரவை சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் வைக்கப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக சர்வமதகுருமாருக்கும், திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றுள்ளது.

திருகோணமலை சுகவாழ்வு மன்றப் பணிமனையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது திருகோணமலை நகரின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை சர்வமதகுருமார்களினால் இந்தப் புத்தர்சிலையை அகற்ற முடியாத பட்சத்தில் இச்சிலை தொடர்பான நீதிமன்றத்தீர்ப்பு எவ்வாறாக அமைந்தாலும் அதனை நடை முறைப்படுத்த சர்வமதக் குருமார் உதவ வேண்டுமென திருகோண மலை மாவட்ட தமிழ் மக்கள் பேர வைத் தலைவர் விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார்.

இச்சிலை தொடர்பான முடிவுகளை மிகவும் அவதானமாக எடுக்க வேண்டும். இதன் மூலமே சமூகங்களுக்கிடையிலான சிக்கல் நிலை உருவாகாமல் தடுக்க முடியுமென மாதம்பகம ஆகாசிதேரர் கூறியமைக்குப் பதிலளிக்கும்போதே விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

# யாழ். ஊடகவியலாளருக்கு கொலைப் பயமுறுத்தல் விடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்றின் ஊடகவியலாளர் ஒருவருக்கு நேற்று முன்தினம் மாலை கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஊடகவியலாளர் பணி முடித்து வீதியில் பயணித்துக்கொண்டிருந்த போது அவருக்கு கையடக்கத் தொலைபேசி ஊடாக அழைப்பு வந்துள்ளது. அழைப்பினை மேற்கொண்ட நபர் அந்த ஊடகவியலாளரைத் தொடர்ந்தும் ஊடகப் பணியினை மேற்கொள்ள வேண்டாம் என்றும் மீறி மேற்கொண்டால் கொலை செய்யப்படுவார் என்ற தொனிப்பட எச்சரித்துள்ளார்.

அவர் யாழ்ப்பாணத் தமிழில் பேசியதாக கொலை அச்சுறுத்தலுக்குள்ளான ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

# புலனாய்வுத்துறையினர் தொடர் படுகொலை; அரசுமீது புலனாய்வுத்துறை பாய்ச்சல்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை மீதான பல்வேறு படுகொலை குற்றச்சாட்டுகளுக்கு அரசு தரப்பில் மறுப்புத் தெரிவிக்காததால் தான் இராணுவப் புலனாய்வுத்துறையினர் மீதான படுகொலைகள் தொடர்கின்றன என்று அரசு மீது சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை சாடி இருக்கின்றது.

இது குறித்து இராணுவ புலனாய்வுத்துறை வெளியிட்டிருக்கும் தகவல்களில் ஊடகவியலாளர் சிவராம் படுகொலை உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுக்கு சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையே காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால் இந்தச் சம்பவங்களுக்கும் இராணுவ புலனாய்வுத்துறைக்கும், எந்தத் தொடர்புமே இல்லை. இத்தகைய குற்றசாட்டுக்களுக்குப் பொறுப்புள்ள தரப்பு என்ற வகையில் அரசு மறுப்புத் தெரிவித்து அறிக்கை விடுத்திருக்க வேண்டும்.

ஆனால் அப்படி எந்த நடவடிக்கையும் அரசு தரப்பிலிருந்து எடுக்கப்படவில்லை. அரசின் மொத்த மௌனத்தால்தான் இராணுவப் புலனாய்வுத்துறை மீதான சந்தேகமும் அதிகரித்து தாக்குதல்கள் நடவடிக்கைகளும் தீவிரமடைந்துவிட்டன.

இதனாலேயே இன்று இராணுவப் புலனாய்வுத்துறையின் முக்கியஸ்தர்கள், அவர்களுக்கு உதவி செய்தவர்கள் என 45 பேர் காவு கொள்ளப்பட்டுவிட்டனர்.

இவை அனைத்திற்கும் அரசுதான் காரணம். முத்தலிப் படுகொலை செய்யப்பட்டுள்ள நிகழ்வானது இராணுவ புலனாய்வுத்துறையில் இன்னும் பலர் தாக்குதல் பட்டியலிலுள்ளனர் என்ற செய்தியைவிட்டுச் சென்றுள் ளது. அரசும் கைவிட்டு விடுகிற நிலை யில் நாங்கள் தற்போது அநாதரவானவர்களாகவே உள்ளோம் என்று சிறிலங்காப் புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# கூழாமுறிப்புப் பகுதியில் வீடுதீப்பற்றி எரிந்து நாசம்

(புதுக்குடியிருப்பு)

ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கூழாமுறிப்புப் பகுதியில் வீடொன்று தீப்பிடித்து எரிந்து முற்றாக அழிந்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 6.45 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

கூழாமுறிப்பைச் சேர்ந்த கமலேஸ்வரன் என்பவரது வீடே தீப்பிடித்து எரிந்து நாசமாகியுள்ளது.பணம்,உடுபுடவைகள், வீட்டுத்தளபாடங்கள் உட்பட பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார். (08)

# இலங்கைக்கு சூழல் பாதிப்பு ஏற்படுமானால் சேது சமுத்திர திட்டம் அமுலாகாது

## இந்தியப் பிரதமர்

(புதுடில்லி)

இலங்கைக்கு சூழல் பாதிப்புக்கள் ஏற்படுமானால் சேது சமுத்திரத்திட்டம் அமுல்படுத்தப்படமாட்டதென இந்தியப் பிரதமர் உறுதியளித்துள்ளார். இலங்கை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்திய விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இந்த உறுதிமொழியினை வழங்கியுள்ளார். சேது சமுத்திரத்திட்டத்தினால் இலங்கைக்கு எந்தவிதமான சூழல் பாதிப்புக்களும் ஏற்படாததென இந்திய சூழலியல் அதிகாரிகள் கூறியிருப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டுள்ளார். இலங்கையர்களின் கோரிக்கைகளை நிவர்த்திசெய்யும் வகையில் சேது சமுத்திரத் திட்டம் மாற்றியமைக்கப்படுமெனவும் பிரதமர் மன்மோகன்சிங், சனாதிபதி சந்திரிகாவிடம் உறுதியளித்திருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பாக இருநாட்டு அதிகாரிகளுக்கமிடையில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட வேண்டியது அவசியமென மன்மோகன் சிங், சனாதிபதி சந்திரிகாவிடம் குறிப்பிட்டுள்ளார். சேது சமுத்திரத் திட்டத்தால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படுமென இலங்கையின் சூழலியல் ஆராய்சியாளர்கள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆளும்கட்சி பா.உ.களுக்கு இன்று விசேட கூட்டம்

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் விசேடகூட்டம் இன்று காலை 8.30இற்கு பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவது தொடர்பில் சனாதிபதியால் விளக்கமளிக்கும் வகையிலேயே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது .இந்த கூட்டத்தில் கட்டாயமாக பங்கேற்குமாறு அரசாங்க கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

## நோர்வே...

நடத்தவுள்ளனர். காலை 9.45 மணிக்கு கிளிநொச்சியை வந்தடையும் இவர்கள் 10.00 மணியளவில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரியவருகின்றது.

## கிழக்கில்...

பெற்றிருப்பதாக வீரமுனைக்கோட்டை அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆதீஸ்வரன் மாஸ்டர் தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளின் நாவிதன்வெளி அரசியல்துறைப் பொறுப்பாளர் சதீசனை விசேட அதிரடிப்படையினர் கடுமையாகத் தாக்கியிருப்பதுடன், அரசியல்துறை காரியாலயத்திற்கும் சேதம் விளைவித்திருப்பதாக அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவித்திருப்பதாகவும் வீரமுனைக்கோட்டை அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆதீஸ்வரன் மாஸ்டர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வன்னிக்கு வருகை தந்துள்ள கிழக்குமாகாணத் தளபதிகளின் பயண ஏற்பாடுகளையும் திட்டமிட்டு சிறிலங்கா அரசு மேற்கொண்டுள்ளது

## கடற்கரை...

தமிழர்தாயகத்[illegible] மாத்திரம் 200 மீற்றர் தூரத்தை அமுல்செய்வதை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அறுகம்பைப் பாலத்திற்கு அருகில் ஒன்று கூடிய அப்பிரதேச மக்கள் பெரிய உல்லயிலுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகம் வரை பேரணியாக் சென்று இந்தத திட்டத்தை கைவிடக்கோரும் மனுவொன்றை அதிகாரிகளிடம் கையளித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க, உல்லாசப் பயணச் சபைத் தலைவர் உதய நாணயக்கார ஆகியோரின் கொடும்பாவிகளும் எடுத்துச் செல்லப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன.

## கொட்டாஞ்...

மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். அவர்களின் பயணப் பையில் ஜம்பெட்டா வீதி முகவரி ஒன்று இருந்துள்ளது. அந்த முகவரிக்குச் சென்ற பொலிசார் சந்தேகத்தின் பேரில் அங்கிருந்த இரு பெண்களை விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

ஜம்பெட்டா வீதியிலிருந்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட பெண்ணும்,குருநகரைச் சேர்ந்தவர் என்றும் இவர் இரு தினங்களுக்கு முன்னரே கொழும்பிற்கு வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொதுக்...

ளது.கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்த எச்சரிக்கையை தேசிய பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் வண. கலவல்கெல சந்திரலோக தேரர் விடுத்துள்ளார்.உத்தேச பொதுக் கட்டமைப்பு அமுல்படுத்தப்படுவதற்கு எக்காரணம் கொண்டும் நாட்டு மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு செவிசாய்த்து சில தேசத்துரோகிகள் இதனை வழங்கத் தயாராகி விட்டார்கள். குறிப்பிட்ட தேசத்துரோகிகளை நாட்டு மக்களுக்கு அடையாளம் காட்டுவதற்காக நாடு தழுவிய ரீதியில் விழிப்புணர்வுப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது